Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 14 செவ்வாய்க்கிழமை (28.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 240




















# சீனா – இலங்கை உறவால் இந்தியாவிற்கு ஆபத்தில்லை

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(பீஜிங்)

சீனாவுடனான இலங்கையின் உறவுகள் குறித்து இந்தியா போன்ற ஏனைய நாடுகள் அச்சமடையத் தேவையில்லையென வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குளோபல் ரைம்ஸ் ஊடகத்திற்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சீனாவின் எழுச்சியை இலஙகை வரவேற்கும் அதேவேளை, ஏனைய நாடுகளின் நலன்களைப் பாதிக்கும் என்று அஞ்சும் அளவுக்கு சீனாவுடனான நட்பு தனிப்பட்ட ஒன்று அல்ல.

இருதரப்பு உறவுகள் மிகவும் சூடானது, ஆதரவானது என்று இரண்டு வகைப்படுத்தலாம்.

சோதனைமிக்க காலப்பகுதியில் சீனா எம்முடன் நின்றது. இலங்கையில் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய சீனா மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

சீனாவின் சில அயல் நாடுகள் பீஜிங்கின் பலம் அதிகரிப்பதை சந்தேகத்துடன் பார்க்கின்ற போதிலும், சீனாவின் எழுச்சியை இலங்கை நல்லதொரு வாய்ப்பாகக் கருதுகிறது.

உலகப் பொருளாதார ஈர்ப்பு வளையம் மாற்றம் பெறுவதால்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வருகிறார் நவிப்பிள்ளை

(கொழும்பு)

ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு விடுத்த அழைப்பை ஏற்றே நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வதாக நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 23 ஆவது ஒழுங்குமுறை அமர்வின்போது இலங்கையின் வதிவிடப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தம்புள்ளையில் வாழ்பவர்களை

# ஒருநாள் அவகாசத்தில் வெளியேற எச்சரிக்கை

(கொழும்பு)

தம்புள்ளை நகருக்கு அருகிலுள்ள பாதெனிய நகரில் பௌத்த புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட இடத்தில் வாழ்பவர்கள், மாற்றுக் காணியோ அல்லது நஷ்ட ஈடோ வாங்கிக்கொண்டு அப்பிரதேசங்களில் இருந்து காலிசெய்ய வேண்டும் என்ற ஒரு உடன்பாடு அண்மையில் எட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இக்குடும்பங்களை நேற்றைய தினம் அழைத்துப் பேசிய மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர், மாற்றுக் காணியோ நஷ்டஈடோ கேட்காமல் உடனடியாக இடத்தை விட்டு அகலவேண்டும் என்று தெரிவித்ததாக ஒரு சில குடும்பங்கள் தெரிவித்தன.

ஒரு நாள் அவகாசத்தில் வீடுகள் இடிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக இடத்தை விட்டு அகல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதாகக் கூறும் சில பாதெனிய வாசிகள் தமிழோசையிடம் கருத்து வெளியிடுகையில், ஒவ்வொரு ஆளுக்கும் ஒவ்வொரு நியாயம் என்பது போல அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதாகக் குற்றம்சாட்டினர்.

இப்பகுதியில் வாழும் சிங்கள குடும்பங்கள் சிலவற்றுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

# சீனா சென்ற ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பு



சீனாவுக்கு நான்கு நாள் பயணத்தை ஆரம்பித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேற்றுக் காலை பீஜிங் விமான நிலையத்தை சென்றடைந்தார்.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் சிறப்பு விமானம் மூலம் பீஜிங் அனைத்துலக விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதிக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் ஜனாதிபதியையும் அவரது குழுவினரையும், சீனாவின் துணை

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண தேர்தலை ஒத்திவைப்பார் ஜனாதிபதி

### நம்பிக்கை கொள்ளும் குணதாச

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தலை ஜனாதிபதி ஒத்திவைப்பாரென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தன்து பயணத்தை நிறைவு செய்து நாடு திரும்பியதும் 13

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை இராணுவத்திற்கு தமிழகத்தில் பயிற்சி இல்லை

## ஏனைய மாநிலங்களில் தொடரும்



இலங்கை இராணுவ வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிக்கப்படமாட்டாது என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி மீளவும் தெரிவித்துள்ளார்.

தஞ்சையிலுள்ள விமானப் படைத் தளத்தில் புதுப்பிக்கப்பட்ட விமான ஓடுதளத்தை திறந்து வைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆனால் அது தொடர்பான வேறு கேள்விகள் எழுப்ப செய்தியாளர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், தமிழகத்தில் அவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டது

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் தேர்தலை நடத்தி சுதந்திரத்தை உறுதிப்படுத்துக

## கரிசனை கொள்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

வடக்கில் வாழ்கின்ற தமிழர்களும் இலங்கையர்களே. எனவே வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி அவர்களும் அரசியல் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்க வழியேற்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் சாந்தினி கோன்காகே தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# இன ஐக்கியத்திற்கான பயணம் முடியவில்லை என்கிறார் வாசு

உள்ளே...

அளவையியலும் விஞ்ஞானமுறையும்

(கொழும்பு)

இலங்கையை ஐக்கியப்படுத்திக் கொள்வது தொடர்பான பிரச்சினையை இந்த நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள இன்னும் முடியாதுபோயுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். ஜாதிக ஹெல உறுமய மற்றும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நிலுவை செலுத்த தவறினால்

# காத்திருக்கிறது மின்சார துண்டிப்பு

வடமாகாணத்திலுள்ள 4 மாவட்டங்களில் மின் கட்டணம் செலுத தாதவர்களின் இணைப்புகளை தாம் வேகமாக துண்டித்து வருவதாக கிளிநொச்சி பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் செல்வராஜா பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மின் கட்டணம் செலுத்தாத நிலையில் வவுனியா மாவட்டத்தில் 1200 மின் இணைப்புகளையும், மன்னார் மாவட்டத்தில் 700 மின் இணைப்புகளையும், கிளிநொச்சி மாவட்டத்தில் 100 மின் இணைப்புகளையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 80 மின் இணைப்புகளையும் இதுவரையில் துண்டித்துளளோம்.

வடமாகாணத்திலுள்ள 4 மாவட்டங்களிலும் மின் கட்டணம் செலுத்தாத நிலையில் 414 மில்லியன் ரூபாவை மின் கட்டணமாக அறவிட வேண்டியுள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 65,534 வாடிக்கையாளர்கள் உள்ளனர். இந்த 4 மாவட்டங்களிலும் மின் பாவனையாளர்கள் 5 மாதங்கள் வரை மின் கட்டணம் செலுத்தாமல் உள்ளனர். இதில் 3 மாதங்கள் வரை மின் கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பை துண்டித்து வருவதாகவும் அவர் கூறினார். சில இடங்களில் 2 மாதங்களுக்கான மின் கட்டணம் செலுத்தாதவர்களின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மின் இணைப்பைத் துண்டிப்பதற்கு முன்னராக வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவித்தோம்.

பொதுமக்கள் இது தொடர்பில் கரிசனைகொண்டு மின் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் இவ்வாறு மின் இணைப்பு துண்டிக்கப்படுவதை தவிர்த்துக் கொள்ள முடியுமெனவும் கிளிநொச்சி பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் செல்வராஜா பிரபாகரன் தெரிவித்தார். (160)


# யுவதியுடன் மோதியது மோட்டார் சைக்கிள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 3 ஆம் வாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் யுவதியொருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 3 ஆம் வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாது காப்புத் திணைக்கள விவசாயப் பண்ணையில் பணிபுரியும் குறித்த யுவதி பணி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் பின்புறமாக மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த 30 வயதான யுவதியே படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். இவ் யுவதியை மோதிய குடும்பஸ்தரும் அவரது மனைவியும் குறித்த விவசாயப் பண்ணையிலேயே பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. (69)



வைகாசி விசாக பொங்கல் நேற்றையதினம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றவேளை பெண்ணொருவர் பறவைக் காவடி எடுத்து தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றும் காட்சியைக் காணலாம். (125)

# பொம்மை வெளியில் விபத்து இரு சிறுவர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு சிறுவர்கள் படுகாயங்களுக்குள்ளாகினர்.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் ஆட்டோ ஒன்றில் பயணித்த சிறுவன் ஒருவனும் வீதியைக் கடக்க முயன்ற சிறுமி ஒருவருமே இவ்வாறு படுகாயங்களுக்கு உள்ளாகினர்.


மானிப்பாயைச் சேர்ந்த சி.சுறுபன் (வயது- இரண்டரை) பொம்மை வெளியைச் சேர்ந்த ஜெ.உசைநியா (வயது-8) என்ற சிறுமியுமே படுகாயங்களுக்குள்ளாகினர். இவர்கள் சிகிச்சைக்காக நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ். நகரில் இருந்து நவாலி நோக்கிப் பயணித்த ஆட்டோவில பயணம் செய்த தாயும் மகனும் பொம்மை வெளிப்பகுதியில் உள்ளபள்ளி ஒன்றிற்கருகில் வீதியைக் கடக்க முயன்ற சிறுமி ஒருவரை முட்டிமோதியதுடன் ஆட்டோவும் விபத்தில் சிக்கியதன் காரணமாக இவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியதாகத் தெரிய வருகின்றது.

ஆட்டோ ஓட்டுநரும் குறித்த சிறுவனின் தாயும் காயங்கள் எதுவுமின்றி தப்பித்துக்கொண்டனர். (பா)





தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் காற்றுக் காலத்தில் பண்ணைப் பாலத்தடியில் மீன்களின் வருகை அதிகரித்துள்ளது. அதனால் மீன்பிடிப்பவர்களையும், பிடித்தமீனை வலையிலிருந்து பிரித்தெடுத்து விற்பனை செய்வதையும் காணலாம். (105)

# ஊருக்குள் புகுந்தது யானை; வர்த்தக நிலையம் துவம்சம்

## நயினாமடுவில் சம்பவம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணி நயினாமடு பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக உள்ள தனியார் வர்த்தகரின் கடையை யானை தாக்கியதில் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. மாற்றுவலுவுடையவரான குறித்த வர்த்தகர் தனது கடையை பூட்டிவிட்டு வீட்டுக்குச் சென்ற நிலையில் இரவு வேளை யானை வந்து அக்கடையை நாசமாக்கியதுடன் அங்கிருந்த மா, சீனி, அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களையும் சேதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கடையின் ஒருபக்க சுவர் இடிந்துள்ளதுடன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் அழிவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாற்றுவலுவுடையவரான குறித்த வர்த்தகர், நிறுவனங்களின் உதவியுடனேயே கடையை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (40)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு.

**திசைமுகப்படுத்தும் நிகழ்வு - 2013**

**Orientation Programme - 2013**

- வணிகமுதற் தேர்வு (புதிய பாடத்திட்டம்)
- இரண்டாம் வணிக தேர்வு (புதிய பாடத்திட்டம்)
- மூன்றாம் வணிக தேர்வு (புதிய பாடத்திட்டம்)

மேற்படி வணிகமாணி பட்டப் பரீட்சைகளுக்கு பதிவு செய்த மாணவர்களுக்காக 01.06.2013 (சனிக்கிழமை) தொடக்கம் 21.07.2013 (ஞாயிற்றுக்கிழமை) வரை ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை பின்வரும் ஒழுங்கில் திசைமுகப்படுத்தும் வகுப்புக்களை யாழ்ப்பாணப்பல்கலை கழக வணிகத்துறை மண்டபத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகுப்புகளில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

கால அட்டவணை

| | |
|---|---|
| வணிகமுதற்தேர்வு | 01.06.2013 - 16.06.2013 |
| இரண்டாம் வணிக தேர்வு | 22.06.2013 - 07.07.2013 |
| மூன்றாம் வணிக தேர்வு | 13.07.2013 - 21.07.2013 |

நேர அட்டவணை மற்றும் மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**முக்கிய குறிப்பு : பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுவோரும், மேற்படி வகுப்புகளில் கலந்துகொண்டு பயன்பெறமுடியும்.**

பதிவாளர்,
27.05.2013

(C2797)


# விபத்தில் சிக்கி இளைஞர் காயம்

கோண்டாவில் டிப்போவிற்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில், விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞன் ஒருவரை எதிரே வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் மோதியது. இதனால் படுகாயமடைந்த இளைஞனை அதே பஸ்ஸில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அழைத்துச் சென்று அனுமதித்தனர். இவ்விபத்தில் இளைஞனின் மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளாகியது. (85)

# விபத்தில் காயமுற்றவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் நேற்று சிகிச்சை பயனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பு குமாரசாமி (வயது-78) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாச் சென்றுகொண்டிருக்கையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளை மோதி விபத்திற்குள்ளாகியதன் காரணமாகவே இவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று இரவு 11.30 மணியளவில் சிகிச்சை பயனின்றி மரணமடைந்தார்.

இதேவேளை விபத்திற்குள்ளாகிய மோட்டார் சைகிளை ஓட்டிவந்தவர் சாவகச்சேரி பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். மேலும் தெரிய வருகின்றது. (பா)



மாங்குளம் பிரதேசத்தில் உள்ள வன்னிவிளாங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவில் அம்பாள் பரிவாரமூர்த்தி சகிதம் வசந்தமண்டபத்தில் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். (40)

# வரிமூலம் கிடைக்கும் நன்மைகளை மக்கள் இழந்துவிடக்கூடாது

## இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர்

(வடமராட்சி)

அரசாங்கம் வரிமூலம் பெறும் வருமானங்களை மக்களுக்கே செலவிடுகின்றது. மக்களுக்காகச் செலவிடும் பணத்தை மக்கள் செலுத்துவதற்கு பின் நிற்கக்கூடாது. செலுத்தப்பட வேண்டிய வரிகளை ஒழுங்காகச் செலுத்தி நன்மைகளைப் பெற்றுக கொள்ள வேண்டுமே தவிர வரி செலுத்துவதிலிருந்து நழுவி நன மைகளை இழந்து விடக்கூடாது என யாழ் உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் பி.சிவாஜி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சிவன் கோயில் கலாமண்டபத்தில் யாழ். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நடாத் தபபட்ட "வரி விழிப்பூட்டல்" கருத் தரங்கிலே உள்நாட்டு இறை வரித் திணைக்கள பிரதி ஆணையாளர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம் மக்களிடமிருந்து வரியாகப் பெறும் பணம் மக்களின் வாழ்க்கைத்தர உயர்சசிகும் நாட்டின் அபிவிருத்தி மேமபாட்டிற்குமே பயன் படுத்தப்படுகின்றது. எனவே, மக்கள் வரிகளை ஒழுங்காகச் செலுத்தி தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு நாட்டின் அபிவிருததி மேம்பாட்டிற்கும் பங்களிக்க வேண்டும்.

அரசாங்கத்திற்கு நேர்வரி, நேரில் வரி என இரண்டு முறைகளில் வரிகள் கிடைக்கின்றன.

இவ்வரிப்பணத்திலிருந்து அரசாங்கம் மக்களுக்கத் தேவை யான கல்வி சுகாதாரம், போக்கு வரத்து தேவைகள் உட்பட பல் வேறு தேவைகளை நிறைவேற்றி வருகின்றது.

அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வரியில் 55 வீதமான வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் கிடைக்கின்றது. வரி செலுத்துவதில் மக்கள் மத்தியில் விழிப்பூட்டல்களை ஏற்படுத்தும் நோக்கமாகவே இது போன்ற கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன என்றார்.(01)

# பதிவு செய்யவும்

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தில் வதியும் எவராவது இதுவரை வாக்காளர் அட்டைக்குப் பதிவு செய்யவில்லையெனில், யூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்பு பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதாவது 18 வயதைத் தாண்டியவராகவும் இலங்கை பிரஜையாகவிருந்தால் வாக்காளராக பதிவு செய்து கொள்ளலாம். அவ்வப் பகுதி கிராம சேவகரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி வாக்காளராக பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (85)

# சுகாதார சீர்கேட்டுடன் பேருந்து தரிப்பிடம்

(அச்சுவேலி)

யாழ். பேருந்துத் தரிப்பிடத்தில் குறிப்பாக 786, 782 ஆகிய பேருந்துகள் தரித்து நின்று பயணம் செய்யும் பேருந்து நிலையப்பகுதி சுகாதார சீர்கேடான முறையில் காணப்படுகின்றது.

அத்துடன் பேருந்தின் வருகைக்காக காத்திருக்கும்போது அப்பகுதியில் ஒருவித துர்நாற்றம் வீசுவதாக போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொளவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இப்பகுதியைச் சுத்தம் செய்து துர்நாற்றம் வீசுவதை தடுக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் துன்னியங்காடு ஞான வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிமுதல் மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (21)

# மருதாம்புலம் அம்பாள் ஆலய மணவாளக்கோலம்

(வடமராட்சி)

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய விஜயவருட கும்பாபிஷேக தின விழாவும், மணவாளக் கோலமும் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் காலை 9 மணியளவில் சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி 11 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 7 மணியளவில் பூசைகள். நடைபெற்று மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் விநாயகர் சகிதம் பத்திரகாளி அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து விசேட நிகழ்ச்சிகளாக காலை 7 மணிக்கு இருப்பைமூலை சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து காவடி, பாற்செம்பு, கரகம் எடுக்கும் நிகழ்வு என்பன இடம்பெறும்.

தொடர்ந்து செல்வா குழுவினர் மங்கள இசை, ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களினுடைய தேவார இசை பொலிகை மறவர் கலைக் குழுவினரின் பஜனைப்பாடல்கள் ஆகியனவும், "அற்புதங்கள் புரிவாள் அம்பிகை" என்னும் பொருளில் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (116,18)

# கவிதைத்தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யோ.புரட்சியின் "இடம் பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்" என்னும் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு சூரியன் எவ்.எம். அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# கொழும்பு றோயல் கல்லூரி நடத்திய நாடகப்போட்டியில் யாழ்.மத்தி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோயல்கல்லூரி நடாத்திய நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலாம் இடத்தினைப்பெற்றுள்ளதுடன் ஆறு விருதுகளையும் பெற்றுக்கொண்டது.

கொழும்பு றோயல் கல்லூரியின் நாடக மன்றத்தினால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் நாடகப்போட்டியில் இவ்வாண்டுக்கான மாவட்ட மட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடக அணி முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டதுடன் ஆறு விருதுகளையும் பெற்று சாத்னை படைத்துள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரியின் நாடக மன்றத்தின் நாடகப்போட்டியானது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போதே மேற்படி மத்திய கல்லூரியின் "விடியலின் பாதை" எனும் நாடகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்நாடகமானது சிறந்த நெறியாள்கை சிறந்த நடிகர் சிறந்த நடிகை சிறந்த துணை நடிகர் சிறந்த இசையமைப்பாளர் சிறந்த ஒப்பனையாளர் ஆகிய ஆறு துறைசார் விருதுகளினைப் பெற்றுக் கொண்டது.

சிறந்த நெறியாளராக பிரவீண் சிறந்த நடிகராக பிரவீண் சிறந்த நடிகைய்ாக சதீஸ் குமார் சிறந்த துணை நடிகராக அபிஷேக் சிறந்த இசையமைப்பாளராக கோகில பிரசாத் சிறந்த ஒப்பனையாளராக பகீதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந் நாடகத்திற்கான நெறியாள்கை நடிப்பு சார் பயிற்சிகளையும் வழிப்படுத்தலையும் மத்திய கல்லூரியின் நாடகமும்அரங்கியலும் ஆசிரியர் எஸ்.ரி.குமரன் வழங்கியுள்ளார்

இந்நாடகத்தில்நடிகர்களாக அபிசேக் சண்முகப்பிரியன் கயேந்திரன் அபினாஸ் கனோஜன் ஜனார்த்தன் தர்மிசன் சுகிர்தன் லக்ஸன் பிரவீன் சதீஸ் குமார் பெல்ஜியோ தர்சன் சாள் செபஸ்ரியான் சன்சயன் விதுர்சன் அட்சரன் சுரேஸ்மோகன் பெனற் ஆகியோர் நடித்துள்ளனர்.

# சாராயம் வைத்திருந்த நால்வர் கைது

(அச்சுவேலி)

வெசாக் விடுமுறை நாட்களில் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த சாராயப்போத்தல்களுடன் நான்கு நபர்களை கைது செய்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன்போது அச்செழுப்பகுதியில் 2 பேரையும்,அச்சுவேலி வடக்குப் பகுதியில் 2 பேரையும் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த வெசாக் தினங்களில் நாட்டில் சகல மதுபான நிலையங்களும் மூடப்பட்டிருந்த நிலையில் கூடிய விலைக்கு விற்பனை செய்யும் நோக்கிலேயே இந்த மதுபானப் போத்தல்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (15)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரம் கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் முருகப்பெருமான் தேரில் வடக்கு வீதியில் பவனி வருவதையும், பச்சை சாத்தி சுவாமி பவனி வருவதையும், புதிதாக வர்ணம் தீட்டப்பட்டு காட்சி தரும் கோபுரத்தினையும் காணலாம். (21)



மறக்க வேண்டியவைகளை நினைத்து வருந்துவதும், நினைக்க வேண்டியவைகளை மறந்து விடுவதும்தான் இந்த உலகத்தில் தற்போது இருந்துவரும் துன்பங்கள் அனைத்திற்கும் காரணம்.

– நிகோலஸ் செம்ஸ்ஃபோர்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நம்மிடமுள்ள அதிகாரக் குரல்!

ஆல் போல் தழைத்து அறுகு போல் பெருகி வாழச் சொல்லி வாழ்த்துகிறார்கள் அல்லவா! ஆல் போல பெருவிருட்சமாகி விடுவதுதான் இயலாவிட்டால் போகட்டும், அறுகம்புல் போல உயிர்ப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் இயல்பு நமக்கு இன்றியமையாத் தேவையாகிறது.

அழிந்துவிடாமல் மீள்வதில் அறுகம்புல்லுக்கொரு ஆற்றல் உண்டு. ஏழுமுறை உழுதுழுது அதன் வேர்முனை ஈறாகப் பொறுக்கியெடுத்த பின்னும், மண்ணிடை நுணுங்கி மறைந்து கிடந்த அணுவளவு கணுவிலிருந்து அது மீண்டெழுந்து முளைத்து நிலம் மூடிப் படர்ந்துவிடும்.

தமிழ் மக்களுக்கு அந்த ஆற்றல் இயல்பாயமைந்தது என்றுதான் தோன்றுகிறது. ஏனெனில், தமிழ் மொழிக்கு அந்தத் தகவமைப்பு இருந்திருக்கிறது. வடமொழியின் பல்முனைத் தாக்குதலில் தமிழின் கிளைமொழிகளாகிய மற்ற திராவிட மொழிகள் யாவும் தேவநாகரி எழுத்தொலித் தாக்கத்தை உள்வாங்கி இணங்கிப் போயிருக்கின்றன.

தமிழ் மட்டும் காலமாற்றத்திற்கேற்ற தகவமைப்போடு தன் வேர்த்தன்மையை இழக்காமல் மக்களின் நாவில் காலத்தை ஊடறுக்கும் மொழியாகத் தொடர்ந்து உயிர்த்திருக்கிறது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட இலக்கிய எழுத்து வாழ்வையும் அது கொண்டிருக்கிறது.

இவ்வளவு புராதனமான நீண்ட ஒரு பண்பாடு, இன்றைய பிரச்சினையில் எல்லாவற்றையும் கறுப்பு–வெளுப்பாய் மட்டுமே எப்படிப் பார்க்க முடிகிறது? மறுபக்கத்தை மறைத்து வெறுத்து விரோத நிலையில் வைத்துக்கொண்டு, தனது பக்கத்தை மட்டும் ஒரே வாய்பாடாக உருப்போட்டுக் கொண்டும் ஒற்றைத் தேசிய உருவாடியபடியும் இருப்பது எங்ஙனம்? கண்மூடி எதிர்ப்பதும் அல்லது கண்மூடி ஆதரிப்பதும் என்ற இரு நிலைப்பாடுகளுக்கிடையில் நம்மை இறுக்கிக் கொண்டிருப்பதை எப்படித்தான் விளக்க முடியும்?

இப்படி பன்மைத்துவத்தை மறுத்து ஒற்றைப்படையான சிந்தனைக்குள் மனிதர்களை மாட்டுவிக்கும் ஒரு கலாசாரம் எப்படித் தற்காலப் பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடியும்? உலகின் சமகாலப் போக்கிற்குள் எப்படிப் பொருந்திக் கொள்ளும்? தன்னை எப்படிப் புதுப்பித்துக் கொள்ளும்? தன்னை எப்படி விமர்சித்துக் கொள்ளும்? தன்னை விமர்சிக்க சக்தி இல்லாத கலாசாரம் உயிருடன் இருக்க முடியுமா?

நம் சமூகத்திற்கென்று பிரத்தியேகமாக வளர்ந்துவிட்டிருக்கும் ஒரு குணாம்சம் இதற்குக் காரணமோ என்று தோன்றுகிறது. நம்மை அறிவுச்சமூகமாகச் சொல்லிக் கொள்வதில் முனைப்புக் காட்டுகிறவர்களிடம் மரபாயிருந்து வரும், 'மற்றவர்களைச் சமமாய்க் கருத மறுக்கும்' போக்குதான் அது. இவ்வாறு சிலர் நினைத்துக்கொண்டிருக்கும் அறிவுரீதியான மேலாதிக்கமும், மற்றோரைக் கீழ்நிலைப்படுத்தி அவர்கள் மீது அதிகாரம் செலுத்த விரும்பும் மனோபாவத்தையே கொண்டிருக்கிறது. "நான் இந்த சமூகத்தின் மதிப்புக்குரிய உயர்ந்த பிரஜை. எனவே நான் சொல்வதையே கேள்!" என்கிற அதிகாரக் குரலைத் தன்னிடம் வைத்திருக்கிறது.

இவர்கள்தான் நமது சமூகத்திற்காக, மக்களுக்காகச் சிந்திக்கிறார்கள், பேசுகிறார்கள் என்பதுதான் நமது பிரச்சினையில் அவிழ்க்க முடியா முடிச்சாக தொடர்ந்து வதையளித்துக் கொண்டிருக்கிறது. இவர்களிடமிருந்தும், இவர்கள் உருவாக்கி அளிக்கும் சிந்தனையிலிருந்தும் மீண்டு வந்தே, இன்றைய பிரச்சினைக்கும் எமது மக்களின் துக்கங்களுக்கும் விடை தேடியாக வேண்டும்.

- ஆசிரியர்

# கிளிநொச்சியில் விபத்துக்களைத் தடுக்க அதிகளவு பொலிஸார் காலையில் பணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் வீதிக்கண்காணிப்புப் பொலிஸார் தமது பணிகளை திறம்படச் செய்து வருகின்றனர்.

கரடிப்போக்குச் சந்தியிலிருந்து இரணைமடுச் சந்திவரை காலை வேளைகளில் அதிகளவு பொலிஸார் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பெருமளவு வாகனங்கள் பயணம் செய்யும் ஏ-9 வீதியுடன் 30 இற்கும் மேற்பட்ட குறுக்கு வீதிகள் இணைகின்றன. அத்துடன் மூன்றுக்கும் மேற்பட்ட பிரபல பாடசாலைகள் இப்பகுதியில் அமைந்துள்ளன.

டிப்போச்சந்திப் பகுதியில் நவீனசந்தை அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், பிரபல வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன.

காலைவேளை அதிகளவான வாகனப் போக்குவரத்தும் பாதசாரிகள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் பயணம் செய்கின்றன.

இருவழிப்பாதையாக்கப்பட்டு முக்கிய சந்திகள், பாதசாரி கடவைகள் என்பனவற்றுக்கிடையில் நடுவில் பூச்செடிகள் வளர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மற்றும் தென்பகுதியிலிருந்தான விரைவு பேருந்து சேவைகளும் இடம்பெறுகின்றன.

இவ்வாறான வாகன நெரிசலும் சனநெரிசலும் அமைந்துள்ள இந்த வீதியில் வீதிச் சமிக்ஞை குறியீடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இருவழிப்பாதையும் தனியாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரே பக்கத்தில் இரு வாகனங்கள் பயணம் செய்யக் கூடியதாக பாதைக்குறியீடு பதிக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் பயணம் செய்வதற்கான வீதியும் பிரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதசாரிகள் நடந்து செல்வதற்கான பகுதியும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மைக்காலத்தில் கிளிநொச்சி நகரப்பகுதியில் அதிகளவு விபத்துக்கள் இடம்பெற்றிருந்தன. வாகனச் சாரதிகள் உட்பட சகலரும் சரியான வீதிச் சமிக்ஞை குறியீடுகளை அவதானித்து பயணம் செய்யாததாலேயே விபத்துகள் ஏற்பட்டிருந்தன. கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் காலை வேளையில் அதிகளவு பொலிஸார் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் வீதிக்குறியீடுகளை மீறிச் செயற்படும் சாரதிகளுக்கும் பாதசாரிகளுக்கும் அறிவுரைகளையும் வழங்கி வருகின்றனர்.

இதுவரை காலமும் சிறிய பாதையாக இருந்த இந்த வீதியில் மஞ்சள் கோட்டுக்கடவைகள் எதுவும் இருக்கவில்லை. இதனால் மக்கள் வீதிக்குறியீட்டு நடைமுறைகள் தொடர்பாக அறிந்திருக்கவில்லை. இதனைக் கண்காணிப்பதற்காகவும் ஆலோசனைகள் வழங்குவதற்காகவும் பெருமளவு பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் விபத்துக்கள் பெருமளவு தவிர்க்கப்பட்டுள்ளன. பொலிஸாரின் இந்தச் சேவை தொடர்ந்தும் இடம்பெற வேண்டுமென பொது மக்கள் கோருகின்றனர்.

# சட்டவிரோத இலங்கையருக்கு சவுதியில் விசேட நடமாடும் சேவை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு நேற்று நடைபெற்ற விசேட நடமாடும் சேவை இன்றும் நடைபெறுமென சவுதி அரேபியாவுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நடமாடும் சேவையில் குறித்த இலங்கை பணியாளர்கள் நாடு திரும்புவதற்கான தற்காலிக விமானப் பயணச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொது முகாமையாளருமான மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய முதலாவது நடமாடும் சேவை சவுதி அரேபியாவின் ஹயில் பகுதியில் நேற்றைய தினம் நடைபெற்றதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவையின்போது சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள தமது உறவினர்களுக்கு அறிவிக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இலங்கை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நடமாடும் சேவையின்போது சவுதி அரேபியாவில் இருந்து வெளியேறுவதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுவதாகவும் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோதமாக சவுதி அரேபியாவில் தங்கியுள்ள பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு ஏதுவாக அந்த நாட்டு அரசாங்கம் பொது மன்னிப்புக் காலத்தை பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் ஒரு வியாபாரம்

(கொழும்பு)

அரசியல் இலங்கையில் ஒரு "வியாபாரம்" என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரி வித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் ஒரு வியாபாரம் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி என்பன இதில் பிரதான போட்டியாளர்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயா. டி.பஸ்கோரலின் மறைவையொட்டி மத்துகமவில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் வெல்கம மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கையில் அரசியலில் ஈடுபடுவதற்கு அரசியல்வாதிகளுக்கு பணம் தேவை எனினும், மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயா.டி.பஸ்கோரல் அரசியலுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்ததுள்ளார்.

# கஞ்சா புகைத்த 67 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வெசாக் தோரணங்களை பார்வையிடுவதற்கும் மதவழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் வருகைதந்து கஞ்சா புகைத்துக்கொண்டிருந்த 67 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோட்டை, கொம்பனிவீதி மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரு தினங்களில் இரவு நேரங்களில் கஞ்சா புகைத்துக் கொண்டி ருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 67 பேரும் காலி, மாத்தறை, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட வெளிமாவட்டங்களைச்சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், அவர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# சிவனொளிபாத மலைக்கான நிறைவு ஊர்வலம் ஆரம்பம்

(கொழும்பு)

சிவனொளிபாத மலைக்கான யாத்திரைப் பருவகாலத்தின் நிறைவைக் குறிக்கும் வகையில் மலை உச்சியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சமன் தேவ விக்கிரகத்தையும் ஆபரணங்களையும் மீண்டும் பெல்மதுளை கல்பொத்தாவல ரஜமகா விஹாரைக்கு எடுத்துச் செல்லும் ஊர்வலம் நேற்றுக் காலை ஆரம்பமானது.

நல்லதண்ணியில் உள்ள பௌத்த மத்திய நிலையத்தில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிவனொளி பாதமலைக்கான யாத்திரைப் பருவகாலத்தின் நிறைவைக் குறிக்கும் வகையில் சமன் தேவ விக்கிரகமும் ஆபரணங்களும் நல்லதண்ணி பௌத்த மத்திய நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டன.

பின்னர் சமன் தேவ ஆலயத்தை அடையவுள்ள வாகன பவனி அங்கிருந்து மீண்டும் பெல்மதுளை கல்பொத்தாவல ரஜமகா விஹாரைக்கு பயணிக்கவுள்ளது.



## கலாநிதி தயான் ஜயதிலக நேர்காணலிலிருந்து

# யுத்தத்தின் பின் மேலெழுந்துள்ள நவீன பழமைவாதமே சமாதானத்துக்கு நாங்கள் மாறுவதை தடை செய்கிறது

**சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் ஆகிய இருபகுதியினரும் இந்த சிறிய நாட்டில் அரசியல் ரீதியாக ஒன்றாக இணைந்து கூடி வாழ்வதை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு வழியை காணத் தவறியிருப்பதுதான் பிரச்சினை. அதற்கு சகல சமூகங்களின் பகுதியினரிடத்தும் உளவியல் மாற்றங்கள் அவசியம். அந்த உளவியல் மாற்றங்கள் தலைவர்களால் வழி நடத்தப்பட வேண்டும். ஆனால் தலைமைத்துவம் அதைச் செய்வதற்குத் தவறிவிட்டது. ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் அதற்கான சாத்தியம் இன்னமும் உள்ளது.**

கேள்வி: யுத்தம் நிறைவடைந்து நான்கு வருடங்களாகிவிட்டன. அதிலிருந்து நாங்கள் அடைந்துள்ளவைகளையிட்டு நீங்கள் திருப்தி அடைகிறீர்களா?

பதில்: ஆம் மற்றும் இல்லை. இலங்கை தேசமும் மற்றும் அதன் பிரஜைகளும் எல்.ரீ.ரீ.ஈ யிடமிருந்து வெற்றிகொள்ளப்பட்டதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது ஒரு சிறிய விடயமல்ல. அப்போது யுத்தம் நடைபெற்றது. பல தசாப்தங்களாக பாரியளவிலான பயங்கரவாதம் இருந்தது. ஆனால் அந்த மிகவும் ஆபத்தான பயங்கரவாதத்தை தோற்கடித்து இலங்கை வெற்றிபெற்றது. அதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால் அந்த சமாதானத்தை நாங்கள் எப்படி வீணாக்கிவிட்டோம் என்பதற்காக நான் அளவற்ற மனவருத்தம் அடைகிறேன். இலங்கை யுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளது, ஆனால் சமாதானத்தை வெற்றி கொள்ளவில்லை அத்தோடு சமாதானத்தை வெல்வதற்கான பாதையில் அது பயணம் செய்யவும் இல்லை.

நாங்கள் இழந்துவிட்ட ஏராள-மான சந்தர்ப்பங்களுக்காக நான் ஆழ்ந்த மனவேதனை அடைகிறேன். மனித உரிமைச் சமூகம், மற்றும் மேற்குலகத்தினர் மேற்கொள்ளும் விமர்சனங்களை ஒருபுறமாக ஒதுக்கிவிடுவோம். ஆனால் இதில் சோர்வுதரும் விடயம் என்னவென்றால் நாங்கள் ஆசியாவில் உள்ள எங்கள் நண்பர்களை ஏமாற்றிவிட்டோம். ஆசியாவை வேகமாக மேலெழும் ஒரு கண்டமாக எடுத்துக் கொண்டால், இந்த மேலெழுகைக்கு உதவும் இரு பெரும் இயந்திரங்களாக இந்தியாவும் மற்றும் சீனாவும் உள்ளன. 2009இல் இந்த இரு நாடுகளுமே எங்கள் நண்பர்களாக இருந்தார்கள். இந்த இருபெரும் இயந்திரங்களையும் பயன்படுத்தி அந்த மேலெழுகையில் நாங்களும் பங்கு வகித்திருக்கலாம். ஆசியாவின் மறுமலர்ச்சியில் நாங்களும் ஒரு அங்கமாகி இருக்கலாம். ஆனால் நாங்கள் அதனை செய்யவில்லை. இனரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட நீதியான ஒரு பல்கலாசார சமூகத்துக்கு அது முன்னுதாரணமாக அமைந்திருக்கும், ஆனால் யுத்தத்துக்குப் பின்பு நாங்கள் அந்த வகையான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பவில்லை.

நாங்கள் சமூக ரீதியாகவும் மற்றும் கலாசார ரீதியாகவும் மிகவும் பின்னோக்கிச் செல்கிறோம் மொத்தத்தில் ஒரு எதிர்மறையான வளர்ச்சி. அதையிட்டு நான் வருத்தமடைகிறேன், ஆசியா தனது இரு கரங்களையும் நீட்டி எங்களை வரவேற்க விருப்பமுடன் தயாராக உள்ளது. பயங்கரவாதத்தை ஒழிக்கும் எங்கள் முயற்சிக்கு ஆசியா முழு ஆதரவையும் வழங்கியது. ஆனால் நவீன ஜனநாயக ஆசியாவில் நாங்கள் எங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளவில்லை, அதனால் முப்பதுக்கு மேற்பட்ட வருடங்களாக நாங்கள் இழந்தவற்றை திரும்ப பெறும் வாய்ப்பை நாங்கள் இழந்துவிட்டோம். எனது உணர்ச்சிகள் ஆழமான இரட்டைத் தன்மையானதாக உள்ளது, யுத்தத்தில் வெற்றிபெற்றதையிட்டு சாதகமாகவும், ஆனால் தற்போது நாங்கள் உள்ள நிலமையையிட்டு மிகவும் வருத்தமாகவும் உள்ளது. அறிவார்ந்த வகையிலும் மற்றும் பண்பாட்டு ரீதியாகவும் பீடிக்கப்பட்டிருக்கும் விரும்பத்தகாத ஒரு நோய். எந்த ஒரு நாட்டினதும் பொருளாதார அதிசயத்துக்கு அவசியமான பங்காக இருக்கக்கூடிய, இரண்டாவது புலம்பெயர் தலைமுறையை சேர்ந்த நன்கு படித்த இளைஞர்களால் நாங்கள் பெரிதும் கவரப்படவில்லை.

கேள்வி: எந்த இடத்தில் தவறு நேர்ந்தது? ஏன் அது இந்த வழியில் சென்றது?

பதில்: இஸ்ரேல் செய்ததைப் போன்ற ஒரு தவறைத்தான் நாங்கள் செய்துள்ளோம். போரினால் கிடைத்த அரசியல் மூலதனத்தை நாங்கள் வீணாக்கிவிட்டோம். அது ஏன் என்று நீங்கள் கேட்கலாம்? நாங்கள் ஒரு செல்லும் வழியை தீர்மானிக்கவேண்டிய சாலைகளின் ஒரு சந்திப்பில் இப்போது நிற்கிறோம். ஒருபுறம் யுத்தத்தில் எங்களுக்கு உதவிய நண்பர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டிய பாதையில் முன்னோக்கிச் செல்வது. போருக்கான காரணங்களை நாங்கள் ஆழமாக ஆய்வு செய்து அவைகளை களைவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க வேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழு வழங்கிய சந்தர்ப்பம் மூலம் இது உதயமாகியது. இது யுத்தத்தின் பின்னான எங்களது செயற்பாடாக இருந்திருக்க வேண்டும், உண்மையில் இதை நாங்கள் விரைவுப் பாதையில் நடைமுறைப்படுத்தி இருக்கவேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளை நாங்கள் விரைவுப் பாதையில் அமுல்படுத்தியிருக்க வேண்டும்.

இப்படியானு ஒரு பாதையில்தான் அசோக மன்னர் பயணித்தார். நான் ஒரு பௌத்தனாக இல்லாவிட்டாலும் இதைத்தான் உண்மையான பௌத்த பாதை என்று நான் அழைக்கிறேன், இதை நான் ஒரு தத்துவ கண்ணோட்டத்தில் பார்க்கிறேன். உறுதியான ஒரு சமரசத்தையும் மற்றும் நல்லிணக்கத்தையும் ஒரு உண்மையான பௌத்தம் போதிப்பதைக் காட்டிலும் வேறு எந்தக் கொள்கையும் மானிடத்துக்கு வழங்கவில்லை. ஆனால் அது உண்மையான பௌத்தம், அது களங்கம் நிறைந்த எந்த மேலதிக இணைப்பையும் இனங்களுடன் சேர்க்கவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அது உண்மையான பௌத்தம் ஆனால் சிங்கள பௌத்தம் அல்ல. ஆனால் நாங்கள் அந்தப் பாதையில் செல்லவில்லை. நாங்கள் மற்றொரு பார்தையை தேர்ந்தெடுத்துள்ளோம், குறுகிய நோக்கம் கொண்ட ஒரு பாதை, அதை ஒரு நவீன பழமைவாதம் என நான் வகைப்படுத்துகிறேன். யுத்தத்தின் பின்னான நிருவாகத்தில் பேராசைத்தனமான நவீன பழமை-வாதம் மேலெழுந்துள்ளது. நிலையான நீடித்த சமாதானத்துக்கு நாங்கள் மாறு-வதை இதுதான் தடை செய்கிறது.

கேள்வி: இதை நாங்கள் எப்படி நிவர்த்தி செய்யலாம்? அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்: இரண்டு மட்டங்களில் இதை நிவர்த்திப்பதற்கான வழிகள் மேற்கொள்ளப்படலாம். முதலாவது யதார்த்தமே அதற்கான திருத்தத்தை செய்யும். ஜனாதிபதி ராஜபக்ஷ வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளதிலிருந்து நாம் சில சாதகங்களைக் காணலாம். இந்த அறிவிப்பு பொருளாதார மற்றும் மூலோபாய யதார்த்தங்கள், அவற்றின் தாக்கத்தையும் மற்றும் முக்கிய சில விடயங்களுக்கான திருத்தத்தையும் செய்ய ஆரம்பித்திருப்பதற்கான ஒரு சமிக்ஞையே ஆகும். எனவே சாதகமான மாற்றங்கள் ஏற்படலாம் என்பதற்கு இது ஒரு பரிமாணம்.

ஏன் நவீன பழமைத்துவம் வெற்றிபெற இயலுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது ஏனென்றால் ஜனாதிபதி ராஜபக்ஷவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மிகவும் தாராண்மைவாத அல்லது முன்னேற்ற எண்ணம் கொண்ட நிருவாகங்களால் புலிகளை தோற்கடிக்க இயலவில்லை அல்லது விரும்பவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவைவிட அதிகம் மிதவாதமும், பன்மைத்துவமும் கொண்ட ஜனாதி-பதி சந்திரிகா குமாரதுங்க, மற்றும் ஜனாதிபதி பிரேமதாஸ ஆகியோர்களது நிருவாகங்கள்கூட புலிகளை தோற்கடிப்பதில் தோல்வி கண்டிருந்தன. உண்மையில் அவர்களால் முழுமனதுடன் அதை செய்ய முடியவில்லை. அவர்களது தோல்வி அதிக பன்மைத்துவம் கொண்ட தாராண்மைவாதத்தையோ அல்லது முற்போக்கான முன்னேற்றங்களை செல்வாக்கற்றவை ஆக்கின. அத்தகைய இயல்புகள் இலங்கை வாக்காளர்களுக்கு மிகவும் வலுவான அணுகுமுறைகளை தவிர வேறு தெரிவுகளை மேற்கொள்ள இடமளிக்கவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷ மக்களின் விருப்பத்தை அறிந்துகொண்டு அதை நடைமுறைப்படுத்தினார்.

கேள்வி: ஜனாதிபதி பயங்கரவாதத்தை ஒழித்திருக்கலாம், ஆனால் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் தீர்வு காண்பதில் அவர் வெற்றியடைந்துள்ளாரா?

பதில்: நிச்சயமாக இல்லை. இன்று ஆசியாவிலேயே உயிரோடிருக்கும் மிகவும் விவேகமுள்ள தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் லீ குவான் யூ. 2010இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு நேர்காணலில் ராஜபக்ஷ சிங்கள தீவிரவாதத்துடன் மிகவும் அதிகமாக பிணைந்துள்ளதால் பயங்கரவாதத்தை ஒழித்ததின் மூலம் கிடைத்த தனது சொந்த வெற்றியை முதலீடு செய்வதற்காக கிடைத்துள்ள வாய்ப்பை அதற்காக திறந்து விட்டுள்ளதையிட்டு தான் மிகவும் வருத்தப்படுவதாக லீ குவான் யூ சொல்லியிருக்கிறார்.

இல்ங்கை ஆட்சியாளர்கள் புலிகளை தோற்கடித்ததின் காரணமாக தாங்கள் தமிழர்களை தோற்கடித்துவிட்டதாக நினைக்கிறார்கள் என்று லீ குவான் யூ சொன்னார். எல்.ரீ.ரீ.ஈ யை தோற்கடிக்க முடிந்தாலும் தமிழர்கள் தோற்கடிக்க முடியாத ஒரு சமுதாயத்தினர் என்று அவர் மேலும் சொன்னார். இதன் கருத்து லீ குவான் யூ தமிழீழத்தை எதிர்பார்க்கிறார் என்பதல்ல, ஆனால் இலங்கை சமாதானத்தை வெல்வதில் தோல்வியடையும், ஏனெனில் அதிகாரத்தில் உள்ள உயர்வர்க்கத்தினர் சிங்கள தீவிரவாத சித்தாந்தத்துடன் அளவுக்குமீறி பின்னிப் பிணைந்துள்ளதுடன் உண்மையான பல்லின, பல் கலாசார இலங்கை விடயங்களைப் பார்க்கத் தவறியுள்ளார்கள் என்பதை அவர் துல்லியமாக கணித்திருந்தார். வருந்தத் தக்கவிதத்தில் இன்றைய இலங்கையைப் பற்றி அவர் சொல்லியிருப்பது மிகவும் சரி, ஏனெனில் இலங்கை நிருவாகம் மற்றும் அரசாங்கம் என்பன, பிரச்சினைகளின் வேர்களை கண்டறிந்து தீர்த்து வைக்கும் விடயத்தில் தோற்று படுபாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் ஆகிய இருபகுதியினரும் இந்த சிறிய நாட்டில் அரசியல் ரீதியாக ஒன்றாக இணைந்து கூடி வாழ்வதை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு வழியை காணத் தவறியிருப்பதுதான் பிரச்சினை. அதற்கு சகல சமூகங்களின் பகுதியினரிடத்தும் உளவியல் மாற்றங்கள் அவசியம்.

அந்த உளவியல் மாற்றங்கள் தலைவர்களால் வழி நடத்தப்பட வேண்டும். ஆனால் தலைமைத்துவம் அதைச் செய்வதற்குத் தவறிவிட்டது. ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் அதற்கான சாத்தியம் இன்னமும் உள்ளது. ஆனால் அவர் தனது அதிகாரத்தை மிகவும் அளவுக்கு அதிகமாக தனக்கு நெருக்கமானவர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்த சக்திகளுக்கு மகிந்த ராஜபக்ஷவிடம் உள்ள அதேயளவு அரசியல் அனுபவம் கிடையாது ஆகவே அவர்களின் கண்ணோட்டம் மிகவும் குறுகியதாக உள்ளது.

### - பௌத்த பிக்கு தீக்குளித்த சம்பவம் -

# உயிருக்கு மதிப்பு வழங்காது படமெடுத்த ஊடகவியலாளர் கைது



பௌத்த பிக்கு ஒருவர் தீக்குளித்த சம்பவம் தொடர்பில் ஊடக தர்மம் கடைப்பிடிக்கப்படவில்லை என்று இலங்கை தகவல் அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த குற்றம் சுமத்தியுள்ளார். அண்மையில் கண்டியில் பௌத்த பிக்கு ஒருவர் மிருக வதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமக்குத் தாமே தீமூட்டி தற்கொலை செய்துகொண்டார்.

இந்த விடயம் ஏற்கனவே குறித்த தேரரால் ஊடகம் ஒன்றின் செய்தியாளருக்கு தெரிவிக்கப்பட்டது. எனினும் குறித்த செய்தியாளர் அதனை இரகசியமாக பேணியதுடன் பௌத்த பிக்கு தமக்கு தாமே தீ மூட்டிய சம்பவத்தை முழுமையாக வீடியோ மூலம் படமாக்கினார். இது இலங்கையின் அனைத்து அரச மற்றும் தனியார் ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் குறித்த விடயம் ஊடக ஒழுக்கத்துடன் தொடர்புடையது என்று குறிப்பிட்டுள்ள சரித்த ரத்வத்த, இவ்வாறான சம்பவங்களின் போது மனித உயிருக்கு மதிப்பு வழங்கி ஊடக நிறுவனங்கள் ஒரு வரையறையை உருவாக்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

இதேவேளை, பௌத்த பிக்கு தற்கொலைச் சம்பவத்துடன் ஊடகங்களுக்கான தொடர்பு குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உத்தரவிட்டுள்ளார். தற்கொலை செய்து கொள்ளும் திட்டம் குறித்து பௌத்த பிக்கு உள்ளூர் ஊடகமொன்றுக்கு முன்கூட்டியே கருத்து வெளியிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்த சம்பவம் குறித்து குற்ற விசாரணைப் பிரிவினர் தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தற்கொலை செய்து கொள்ளும் திட்டம் குறித்து முன்கூட்டியே அறிவித்த சில ஊடகவியலாளர்களும் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதே வேளை, சம்பவம் தொடர்பில் வீடியோக் காட்சிகளை பதிவு செய்த ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார். தற்கொலையை தடுக்காது அதனை வீடியோக்படமெடுத்ததாகத் தெரிவித்து குறித்த ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

## தனியார் வங்கிகளிலும் மும்மொழிக் கொள்கை

நாட்டிலுள்ள அனைத்து தனியார் வங்கிகளிலும் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசகரும மொழிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனியார் வங்கிகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற முதற்கட்ட கலந்துரையாடலின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற கலந்துரையாடலில் 14 தனியார் வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் வங்கிகளின் ஆவண முறைமைகள் தற்போது சிறந்த முறையில் பேணப்பட்டு வருவதாகவும் சில ஆவணங்களில் அரச வங்கிகளைப் போன்றே திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை இந்தியா இடையே வருகைக்குப்பின் விசா

### – பேச்சுக்கள் விரைவில்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் வருகைக்கு பின்னர் விசாவை அறிமுகப்படுத்த பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

விசா அவசியமற்ற முறைமை ஒன்றை அமுலாக்குவதன் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையும் இந்தியாவும் நீண்ட நாள் நட்பு நாடுகளாக உள்ளன. இந்தநிலையில், இரண்டு நாடுகளுக்கும் இடையில் பயணிக்கும் போது விசா அவசியப்பாடு அற்ற நிலை ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



பௌத்தர்களின் புனித தினமான வெசாக் பௌர்ணமி தினத்தில் நாட்டின் பல பாகங்களிலும் வெசாக் தோரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பெபிலியான சந்தியில் அமைக்கப்பட்ட வெசாக் தோரணத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வமாக காட்சிப்படுத்தியதைக் காணலாம்.

## இலங்கைப் பிரதிநிதிகளைக் கொல்லி சுவிஸில் புலிகளின் "ஹிட்ஸ்கொட்"

### - என்கிறது திவயின

சுவிஸர்லாந்தில் நடைபெறும் சர்வதேச மாநாட்டுக்கு செல்லும் இலங்கையைச் சேர்ந்த பிரதான அரசியல்வாதிகளை கொலை செய்வதற்காக புலிகளின் தாக்குதல் பிரிவான ஹிட்ஸ்கொட் நிலைப்படுத்தப்பட்டுள்ளதாக இரகசிய தகவல் ஒன்று சுவிஸ் பொட்போல் காவற்துறையினருக்கு கிடைத்துள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சுவிஸ் நாட்டின் முக்கியஸ்தர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவினர், ஜெனிவாவுக்கு செல்லும் இலங்கை அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளையும் அவசரமான நிலையில் செயற்படக் கூடிய வெளிநாட்டு சாரதி மற்றும் குண்டு துளைக்காத வாகனத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் உள்ள புலிகளுக்கு எதிரான குழு, இந்தத் தாக்குதல் அணி குறித்த தகவல்களை சுவிஸ் காவற்துறையினருக்கு வழங்கியுள்ளது. கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரின் போது இந்தத் தாக்குதல் அணி நிலை நிறுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அமைச்சர்கள் தங்கும் ஜெனிவாவில் உள்ள இண்டர்கொண்டிநேட்டல் விடுதிக்கு சென்று புலிகளின் புலனாய்வாளர்கள் அமைச்சர்களின் பயணங்கள் குறித்த தகவல்களை திரட்டியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ள சுவிஸின் உயர்மட்டத் தரப்புத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

## பிக்குகளின் செயற்பாட்டால் மாட்டிறைச்சியும் இறக்குமதி

### ஐ.தே.க.விசனம்

பௌத்த பிக்குகளின் செயற்பாடுகள் காரணமாக நாட்டில் மாடு கொல்லப்படுவதை நிறுத்தி அவுஸ்ரேலியாவிலிருந்து மாட்டிறைச்சி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாணசபை உறுப்பினர் கித்சிறி மஞ்சநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.8ஆக காணப்படும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கின்றபோதும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 8.3ஆக காணப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

கடன் பெறுவது தொடர்பான அறிக்கை யூன் மாதம் 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஹர்ச டி சில்வா குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதை தவிர்ப்பதற்கு அரசு முயற்சிப்பதாகவும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தாம் தயாராகவுள்ளதாகவும் ஹர்ச டி சில்வா கூறினார்.

## வெசாக் வழிபாடு நிறைவு

சிரச வெசாக் வலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த புத்த பகவானின் புனித சின்னங்கள் மற்றும் மேலும் ,பல முக்கிய தேரர்களின் புனித சின்னங்களை வழிபடுவதற்காக வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்தது. நேற்று அதிகாலை வரையும் நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருந்து இந்தப் புனித சின்னங்களை வழிபட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தினங்களாக ஆயிரக்கணக்கான மக்கள் சிரச வெசாக் வலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த புனித சின்னங்களை வழிபட்டனர். புனித சின்னங்கள் வழிபாடு நிறைவு பெற்றதை குறிக்கும் வகையில் சிரச வெசாக் வலயத்தில் நேற்று அதிகாலை விசேட சாந்தி பூஜையும் நடைபெற்றது.

## எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் சிலதினங்களில் ஆரம்பமாகும்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை எதிர்வரும் இரு தினங்களில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. சுத்திகரிப்பதற்கான மசகு எண்ணெய் கொழும்புத்துறைமுகத்தை வந்தடையாமையின் காரணமாக சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலைய பணிகள் முடங்கின.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மசகு எண்ணெய் ஏற்றிய கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடந்த 15ஆம் திகதி சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன

## பௌத்த பூமியில் பணியாற்ற மகிழ்ச்சி

### – புதிய இந்தியத் தூதுவர்

இலங்கைக்கான புதிய இந்திய் உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா எதிர்வரும் யூன் மாத நடுப்பகுதியில் பதவியை ஏற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பதவியை மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளதாக சின்ஹா தெரிவித்துள்ளார்.

பௌத்த பூமியான இலங்கையில் கடமையாற்றுவது மகிழ்ச்சி அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். வெனிசுலாவிற்கான தூதுவர், பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானுக்கான இணைச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு உயர் இராஜதந்திர பதவிகளை சின்ஹா வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு விபத்தில் உயிரிழந்துள்ளனரா?

படகு விபத்தில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களும் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா நோக்கிப் பயணம் செய்த புகலிடக் கோரிக்கையாளர் படகொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது,

இந்தப் படகில் பயணித்தவர்கள் உயிரிழந்திருக்கக் கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.எட்டு உயிர்காப்பு அங்கிகள் கொகோஸ் தீவுகளில் கரையொதுங்கியுள்ளன. இந்த உயிர் காப்பு அங்கிகளை எந்த நாட்டவர்கள் பயன்படுத்தினார்கள் என்பது பற்றிய தகவல்களை அவுஸ்ரேலிய பொலிஸார் இதுவரையில் வெளியிடவில்லை.


சம்பவம் தொடர்பில் பொலிஸாரும், எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தங்கி வாழ்தல் எனும் ஒரு நிலையிலிருந்து மாறுபட்டு தமது முயற்சியால் சொந்தக் காலில் நின்று வாழ்வதற்குரிய உயர்ந்த நிலையினை சமுர்த்தித்திட்டம் பெற்றுக் கொடுத்துள்ளது என ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி புலமைப் பரிசில் திட்டம், பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்ட பயனாளிகளுக்கான உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சகலவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கின்ற எம் மக்கள் இழப்பதற்கு இனி ஒன்றுமில்லை எனும் நிலையில் சமுர்த்தித் திட்டமானது இம் மக்களுக்கு கைகொடுத்து நிற்பதாய் உணர்கிறேன்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டும் அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியையும் எதிர்கால ஒளிமயமான வாழ்க்கையையும் அவர்கள் நல்லதொரு அடித்தளத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு காலத்திலே கல்வியிலே தலைநிமிர்ந்து நின்ற எம் யாழ்ப்பாணம் இன்று இந் நிலையிலிருந்து இறங்கி வருவதற்கான ஆபத்தான கட்டத்தை நோக்கி நகருகிறது.

இந்நிலையில் வறுமை எந்த விதத்திலும் எம் மாணவச் செல்வங்களின் கல்வியைப் பாதித்து விடக்கூடாது என்பதற்காக எங்களுடைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார்.

இந்நிகழ்வில், சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன், கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், ஈ.பி.டி.பி. யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் இ.ஐங்கரன், ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி பிரதேச இணைப்பாளர் தர்மராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொருளாதார பின்னடைவுகளால் வெங்காயச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருட காலபோக வெங்காயச் செய்கையில் ஏற்பட்ட எதிர்பாராத பாதிப்புக்களால் விவசாயிகள் பெரும் பொருளாதார பின்னடைவைச் சந்தித்திருந்தனர்.

இதனால் இவ்வருடம் மிகக் குறைந்தளவிலேயே சிறுபோக வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட காலபோகச் வெங்காயச் செய்கை மூலம் 31,020 மெற்றிக்தொன் விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த போதிலும் 6,980 மெற்றிக்தொன் வெங்காயமே தேறிய விளைச்சலாகக் கிடைத்துள்ளது.

பெரும் வருமான இழப்புக்கு உள்ளான விவசாயிகள் தாம் பெற்ற விவசாயக் கடனைக்கூட திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதுமட்டுமல்லாமல் விதை வெங்காயத்திற்கும் பெரும் தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கிறது.

வேதாள வெங்காயத்தின் உண்மை விதையைப் பயன்படுத்தி வெங்காயப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறும், உற்பத்தி செலவு குறைவான நோய்த் தாக்கம் அற்ற வெங்காயத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

# முருங்கைக்காய்க்கு சந்தையில் கிராக்கி

(அச்சுவேலி)

குடாநாட்டுச் சந்தைகளில் தற்போது முருங்கைக்காயின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது ஒரு கிலோ முருங்கைக்காயின் விலை 300 ரூபா முதல் 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோரால் கூறப்படுகிறது.

குறித்த நோய்களுக்கு அரு மருந்தாகப் பயன்படுத்தப்படும் முருங்கைக்காயை விலையேற்றத்தின் மத்தியிலும் மக்கள் கொள்வனவு செய்வதைக் காணமுடிகிறது. (85)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடை மேற்கு நாவலடி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் (108) நாளை புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் மு.ப 10 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி விஷேட அபிஷேக பூசைகள் இடம்பெறவுள்ளன. (21)

# சாதனை மாணவர கௌரவிப்பு



(முழுங்காவில்)

பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பிள்ளைகளில் இருந்து இவ்வாண்டு பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் வாய்ப்பைப்பெற்ற மாணவர்களை மதிப்பளித்து பாராட்டும் நிகழ்வு பூநகரி பல. நோக்குக் கூட்டுறவுச் சங் கத்தில் பணியாளர் நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்பட்டது.

பணியாளர் நலன்புரிச் சங்கத்தலைவர் இ.நவரத்தினம் தலைமையில் சென்றவாரம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். பூநகரி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.சுந்தரமூர்த்தி நெறியாளர் குழு உறுப்பினர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட சகல பணியாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கணிதப்பிரிவில் 3ஏ பெற்ற அ.நிரோஜன், இ.தனுசியா, செ.கீர்த்தனா, ஜெ.சரணியா ஆகியோரும் பாராட்டி மதிப்பளிக்கப்பட்டனர். (112)

# புளியங்கூடல் மகாமாரி அம்பாளுக்கு மகோற்சவப் பெருவிழா

(வேலணை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜமகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் 24 ஆம் திகதி மாம்பழத்திருவிழாவும், 26 ஆம் திகதி கைலாச வாகனத்திருவிழாவும், 27 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 28 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 29 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 30 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(21)

# முரசின் இன்றைய பலன்

(28.05.2013 - செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 14 ஆம் திகதி.
நட்சத்திரம் பூராடம் பி.ப 4.44 வரை. திதி சதுர்த்தி
முற்பகல் 12.56 வரை. இராகுகாலம் 02.52 - 04.22 வரை.
சுபநேரம் 10.22 - 11.52 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத பணி ஏற்படலாம். நம்பகத்தன்மை குறைந்தவர்களிடம் விலகுக. பொறுமை உங்களைக் காக்கும். தொழில், மந்தநிலை. சேமிப்பு செலவுக்கு ஆகும். போக்குவரத்தில் கவனம் நல்லது. நற்செயல்களால் சமூக மரியாதை வரும். |
| ரிஷபம் | வாழ்க்கைத்தரம் உயர புதிய அனுகூலம். வாய்ப்பை பயன்படுத்தி, முன்னேற்றம் பெறலாம். தொழில், திட்ட இலக்கு நிறைவேறும். உபரி பணவரவு. உறவினர் இல்ல சுபநிகழ்ச்சி. வெளியூரிலிருந்து நல்ல செய்தி கிடைக்கும். |
| மிதுனம் | முன்பு நீங்கள் உதவியவரின் உதாசீனத்தை எதிர்கொள்வீர்கள். நிதானம் காப்பது நல்லது. தொழில் புது முயற்சிக்குப் பலன். அளவான பணவரவு. இல்லறத்துணையின் ஆதரவு நம்பிக்கையூட்டும். கலைஞர் மாணவர்க்கு உயர்ச்சி. |
| கடகம் | அனுபவ அறிவால் செயல்கள் வெற்றி. உறவினர், நண்பர் பாராட்டுவார்கள். உற்சாக மனநிலை. தொழில் வளர்ச்சி. உபரிவரவில் சேமிப்பீர்கள். உத்தியோகத்தருக்கு வெகுமதி, சலுகைகள் கிடைக்கும். புத்திரர் மகிழ்விப்பர். |
| சிம்மம் | சவால்களை ஏற்று செயல்படுவீர்கள். பாராட்டு கிடைக்கும். தொழில், இடையூறுகளை சரிசெய்வீர்கள். அதிக பணவரவு. விரும்பி நினைத்திருந்த பொருள் வாங்குவீர்கள். உத்தியோகத்தருக்கு உயர்வு. வெளியூரிலிருந்து சுபசெய்தி. |
| கன்னி | எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். நண்பர், உறவினர் உதவுவர். தொழிலில் ஆதாயம் பெருகும். உபரி பணவருமானம். குடும்பத்தினர் தேவைகள் நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர்க்கு நன்மைகள். உடல்நலம் பலம் பெறும். |
| துலாம் | உங்கள் பேச்சில் அன்பும் கனிவும் இருக்கும். கேட்டு வருபவர்களுக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சிக்கு அனுகூலம் வரும் பயன்படுத்துக. கடன் வசூலாகும். பொன், பொருள் சேர்க்கை. புதியவர் ஒருவர் அறிமுகத்தால் பயன் வரும். |
| விருச்சிகம் | படபடப்பான நாள். புதிய வேலைகள் வரும். பணப்பற்றாக்குறை இருக்கும். தொழில், போட்டிகளை சமாளிப்பீர்கள். மேலதிகாரிகளை அனுசரித்துப் போங்கள். வாக்குவாதம் வேண்டாம். உணவில் கவனம். மாணவர்கள் புதிய ஊக்கம் பெறுவர். |
| தனுசு | கூடுதல் வளம் பெற அனுகூலம் உருவாகும். உறவினரிடம் நல்மதிப்பு கிடைக்கும். தொழில் இலக்கு நிறைவேறும். தேவையான அளவில் பணவரவு. கடன்சுமை குறையும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி திட்டம். பிள்ளைகள் ஆதரவாக இருப்பர். |
| மகரம் | திறமையை வளர்த்துக்கொள்வீர்கள். கடினமான உழைத்துப் பலன் பெறுவீர்கள். தொழில், புதிய வளர்ச்சி இலக்கை எட்டும். வரவு திருப்திகரம். வெகுநாளாய் எண்ணியிருந்த பொருள் வாங்குவீர்கள். புதியன தொடங்கும். |
| கும்பம் | புத்துணர்வும் செயல்களில் ஆர்வமும். தேங்கிய பணிகளை முடிப்பீர்கள். தொழில் தாராள வளர்ச்சி. அதிக பணவரவு. குடும்பத்திற்கு தாராளமாய் செல்வு செய்வீர்கள். பயணத்தின் மூலமும் லாபம் வரும். உறவினர்க்கு உதவுவீர்கள். |
| மீனம் | நிதானத் தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், இடையூறு கண்டறிந்து சரிசெய்வீர்கள். வரவை விட செலவு கூடும். நண்பர் உதவுவர். நேரம் ஒதுக்கி பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். ஆலய கருமங்களில் அதிக ஈடுபாடு. |

# பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் சர்வதேச தரத்திலான ஆடுகளம்

## இரண்டு மாதங்களில் பூர்த்தியாகும்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மாதங்களில் சர்வதேச தரத்திலான ஆடுகளம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் உருவாக்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபையின் தெரிவுக் குழுத் தலைவரும், முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூரிய தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையினால் வடக்கு-கிழக்கு வீரர்களை இனங்காணும் இரண்டு நாள் பயிற்சிப் போட்டி நேற்று சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நிறைவடைந்தது. இப்போட்டிகள் நிறைவில் சர்வதேச தரத்திலான புற்றரை ஆடுகளம் அமைப்பதற்கான சம்பிரதாய பூர்வமான நிகழ்வு இடம்பெற்றது. இதனை தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய ஆரம்பித்து வைத்தார். இதில் இலங்கை தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய, தெரிவுக் குழு உறுப்பினர்களாக ஹஷான் திலகரத்தின பி. விக்கிரமசிங்க மற்றும் பாடசாலைப் பயிற்றுநர்கள், வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் நிறைவில் எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே சனத் ஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,.

23 வயதிற்குட்பட்ட வடக்கு-கிழக்கு வீரர்களை தெரிவு செய்வதுடன் திறமையான சிலரை இலங்கை கிரிக்கெட் சபையின் வீரர்கள் ஒப்பந்தத்தில் இணைப்பதற்கான முதல் கட்ட முயற்சியே இந்த இரண்டு நாள் பயிற்சி ஆட்டம். இதில் குறைந்தது ஐந்து அல்லது ஆறு வீரர்கள் இந்த ஒப்பந்தத்தில் இணைக்கப்படவுள்ளனர். வடக்கு-கிழக்கு வீரர்களின் தரத்தை உயர்த்துவதற்கு படிப்படியாக நாங்கள் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் இரண்டு மாதங்களில் யாழ்ப் பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் சர்வதேச தரத்திலான புற்றரை ஆடுகளம் உருவாக்கப்படும். அதற்கான சம்பிரதாயபூர்வமான நிகழ்வு இன்று (நேற்று) இடம்பெற்றமை யாழ்ப்பாண வீரர்களுக்கு மகழ்ச்சியானதே.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபையினால் நடாத்தப்படும் இலங்கை பிரிமியர் லீக் போட்டிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள அணிகளில்அப்பிரதேச வீரர்களையும் இணைத்துக் கொள்ளும்படி அணி உரிமையாளர்களைக் கோரியுள்ளேன். இதன்படி வடக்கு-கிழக்கு வீரர்களும் இலங்கை பிரிமியர் லீக் போட்டிகளில்விளையாடும் வாய்ப்பு உருவாகும். இவ்வாறு வடக்கு-கிழக்கு வீரர்களும் தேசிய அணியில் இடம்பிடிக்க வேண்டும் என்பதற்காக இலங்கை கிரிக்கெட் சபை பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த முயற்சிகள் நிச்சயம் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. எனினும், இதற்கு தேசிய கிரிக்கெட் அணியில் வடக்கு - கிழக்கு வீரர்கள் இடம் பிடிக்க முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையைமுதலில் கைவிடவேண்டும்.இதிலிருந்து மீண்டாலே அடுத்த நிலையை விரைவில் பிடித்துக்கொள்ள முடியும்.

இதற்கு பெற்றோர்களின் ஊக்குவிப்பும் மிக அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்.பி.)





புற்றரை ஆடுகளம் அமைப்பதற்கான நிகழ்வை சனத் ஆரம்பித்து வைப்பதையும், வடக்கு-கிழக்கு வீரர்களுடன் கலந்துரையாடுவதையும் காணலாம்.

# ஐ.பி.எல். துளிகள்




கடந்த 5 ஆண்டுகளாக எங்களால் கிண்ணத்தை வெல்ல முடியாமல் போய் விட்டது. ஆனால் இந்தமுறை பொறுப்புடன் ஆடி கிண்ணத்தை வென்றோம். அனைத்து வீரர்களின் கூட்டு முயற்சியே இதற்குக் காரணம். கப்டன் பொறுப்பு ஒரு சவாலாக இருந்தது.

இதிலிருந்து நிறைய அனுபவத்தை கற்றுக் கொண்டேன் என மும்பை இந்தியன்ஸ் அணிக் கப்டன் ரோகித் சர்மா தெரிவித்தார்.

*



எங்கள் அணி துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பிவிட்டனர். ஹசியும், ரெய்னாவும் நல்ல பந்துகளில் அடுத்தடுத்து ஆட்டமிழந்துவிட்டனர். ஏனைய வீரர்கள் தேவையில்லா ஷொட்களை அடித்து ஆட்டமிழந்து விட்டனர். நல்ல இணைப்பாட்டம் அமைக்கத் தவறிவிட்டோம். தொடரில் முதல் முறையாக நெருக்கடியின் பிடியில் ஆடினோம். மலிங்க, போலாட் சூழ்நிலையைப் புரிந்து ஆடி மும்பை அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். வெற்றிபெற்ற அணிக்கு வாழ்த்துக்கள் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

*

ஒரு சிறந்த அணியில் இடம்பெற்று ஆடியது சந்தோஷம் அளிக்கிறது. எனது குடும்ப உறுப்பினர்களுக்கும், இரசிகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அணி சரிவில் இருந்த போது பொறுப்புடன் ஆட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதை இந்தப் போட்டியில் சிறப்பாகச் செய்தேன். அதன் மூலம் ஆட்டநாயகன் விருது வென்றது மகிழ்ச்சி. எங்கள் அணியில் உள்ள அனுபவ வீரர்கள் அறிவுரைகள் வெற்றிக்குப் பெரும் துணையாக அமைந்தது. இதில் பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட், ரிக்கி பொண்டிங், சச்சின், கும்ளே, ரொபின் சிங் என அனைவரும் வெளியில் இருந்தவாறு எங்களுக்கு ஊக்கமளித்தனர் என மும்பை இந்தியன்ஸ் அணி அதிரடி வீரர் போலாட் தெரிவித்தார்.

# தொடரை வென்றது பாகிஸ்தான்




அயர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றிக்கொண்டது. அயர்லாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் அயர்லாந்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அயர்லாந்து அணி ஜோய்ஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அயர்லாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோய்ஸ் 116, ஓபிரைன் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அப்துல் ரஹ்மான் நான்கு, யுனைட்கான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 230 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, ஆரம்பத்தில் அயர்லாந்து அணியின் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்தும் பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டன. இந்நிலையில் கம்ரன் அக்மல் ஒரு முனையில் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக உயர்த்தினார். அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பின்வரிசை வீரர்கள் ஆடியதுடன் அணியின் வெற்றிக்கும் துணை புரிந்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 48.4 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கம்ரன் அக்மல் 81, மலிக் 43, றியஸ் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முர்ரா, ஜோன்ஸ்ரொன் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக கம்ரன் அக்மல், தொடர் நாயகனாக ஓபிரைன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# இங்கிலாந்து முன்னிலை

(லண்டன்)

ஸ்வான், பின் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் சுருண்டது.

இங்கிலாந்து,நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி இங்கிலாந்தின் லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி ஸ்வான், பின் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் புல்ரன் 28, கப்டன் மக்கலம் 20 ஓட்டங்களைப்பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஸ்வான் நான்கு, பின் மூன்று, புரொட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

184 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் கப்டன் குக் ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 296 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 354.

# இளைஞர் சேவை மன்ற பெண்கள் மென்பந்து
# சங்கானை இளைஞர் அணி சம்பியன்


சங்கானை இளைஞர் அணி


நல்லூர் இளைஞர் அணி

(சுன்னாகம்)

யாழ். மாவட்ட மட்ட பெண்கள் மென்பந்து கிரிக்கெட் தொடரில் சங்கானை இளைஞர் சேவை மன்ற அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால், யாழ். மாவட்ட பெண்கள் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் அண்மையில் சுன்னாகம் நியூஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இப்போட்டி ஆறு ஓவர்களாக இடம்பெற்றது. இதில் பிரதேச மட்டத்தில் முதலிடங்களைப் பிடித்த அணிகள் மோதின. இருப்பினும் இதன் இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச இளைஞர் அணியும், சங்கானைப் பிரதேச இளைஞர் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நல்லூர் பிரதேச இளைஞர் அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சங்கானைப் பிரதேச இளைஞர் அணி பிரதவனி, ஜெயரஞ்சினி ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சங்கானைப் பிரதேச இளைஞர் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரதவனி 21, ஜெயரஞ்சினி 19, ரஜிதா 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுவர்னா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய நல்லூர் பிரதேச இளைஞர் அணி. கோபிகா, ரஜிதா, அனுயா ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நல்லூர் பிரதேச இளைஞர் அணி 4.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யாழினி ஒன்பது, கௌதமி ஐந்து ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபிகா, ரஜிதா, அனுஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் 40 ஓட்டங்களால் வெற்றிபெற்ற சங்கானைப் பிரதேச இளைஞர் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இப்போட்டி நிகழ்வில் தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், விளையாட்டு அதிகாரிகள், இளைஞர் சேவை மன்ற அணிகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தினர்.(93)

# தெற்காசிய விளையாட்டில் கிளித்தட்டு அறிமுகம்



தமிழர்களின் பழமையான விளையாட்டுகளில் ஒன்றான கிளித்தட்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் அறிமுகமாகவுள்ளது.

தமிழர்களின் பழமையான விளையாட்டுகளில் ஒன்று கிளியாந்தட்டு. (கிளித்தட்டு). இது கிளி பாரி, உப்புக்கோடு, உப்புப்பட்டி உள்ளிட்ட பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இந்த விளையாட்டு இந்திய அளவில் சரமணி, சர்பட்டி, லோன் பட்டி, தார்யா பந்த், சரகரி, பஞ்சவாடி, சிக்கா எனப்பல்வேறு பெயர்களுடன் விளையாடப்பட்டிருக்கிறது. இந்தியில் இது அட்டியா பட்டியா என அழைக்கப்படுகிறது. விளையாட்டு விதி அனைத்து இடங்களிலும் ஒன்றாகவே உள்ளது.

விளையாட்டு முறை ஒன்றுதான். கிராமங்களில் மாலை வேளையிலும், ஓய்வு நேரத்திலும், பொழுதுபோக்கிற்காகவும் விளையாடப்பட்ட இந்த விளையாட்டால் ஓடும் திறன், விழிப்புணர்வு, மதிநுட்பம் ஆகியவை அதிகரிக்கும். மேலும், உடல் பயிற்சி, கவனம், சமயோசித புத்தியும் வளரும். தற்போது கிளித்தட்டு போட்டி சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்து வருகிறது.

இந்நிலையில் பூடான் நாட்டில் எதிர்வரும் ஜூன் மாதம் 16 முதல், 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டியில், கிளித்தட்டு இடம்பெறுகிறது.

எப்படி விளையாடுவது?

செவ்வக வடிவத்தில் தரையில் கோடுகள் வரையப்பட வேண்டும். அந்த செவ்வகம் நீள வாக்கில் இரண்டாக பிரிக்கப்பட வேண்டும். கிளியாந்தட்டு விளையாட்டில், செவ்வகத்தின் இரண்டு பக்கமும் நான்கு அறைகளாக பிரிக்கப்படும். அட்டியா பட்டியாவில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறுவர்கள் இரு சமமான குழுக்களாக பிரிக்கப்படுவர். முதலில் ஒரு குழு விளையாட்டில் இறங்கும்.

அவர்களைக்கீழே இறங்க விடாமல் எதிர்க் குழு தடுத்து, தொடுவதற்கு பிரிக்கப்பட்ட கிடைமட்டக் கோடுகளில் காவல் நிற்பர். அணித்தலைவரை கிளி என்று அழைப்பர். இவர் தான் குழுவில் திறமையானவராகவும், சற்று உயரமானவராகவும் சுறுசுறுப்பு உடையவராகவும் இருப்பார்.

கிளி ரெடி என்றபடி இவர் மேல் நோக்கி ஏறி வருவார் அப்போது, இறங்கும் குழு, வேகமாக முதல் கோட்டை தாண்டி முதல் கட்டத்திற்குள் வந்து விடுவர். இறங்கும் குழு எப்போதும் கிளியிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கிளி அவரது கை எட்டும் அளவிற்கு எதிரணியினரை அவுட் செய்யலாம்.

இப்படி இறங்கும் குழு முழுவதுமாக எல்லைக் கோடுகளைத் தாண்டிச் சென்றால், அவர்கள் பழம் என்றும், இறங்காதவர்களை காய் என்றும் கூறுவர். பழம் எடுத்தவர்கள், எதிரணியிடம் பிடிபடாமல் (அவுட்) சென்று தலைப்பக்கத்திற்கு சென்று விட்டால் ஆட்டம் ஒன்று (புள்ளி ஒன்று) மீண்டும் இறங்க வேண்டும். காய் அவுட்டானால் வெளியே வந்து விடவேண்டும்.

# சாதனை வீரர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் சாதித்த தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீரர்கள் பாடசாலை சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த 17,18,19 ஆம் திகதிகளில் கொழும்பு மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி சார்பில் பங்குபற்றிய அனிந்தா 18 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் 2.90 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் சுவிகாந்த 39.44 மீற்றர் எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்று பாடசாலைச் சமூகத்திற்கும், மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்ந்தனர். இந்நிலையில் தேசிய போட்டியில் சாதித்த வீரர்களும், அவர்களின் பயிற்றுநர்களுக்கும் பாடசாலை சமூகத்தினரால் பாராட்டி கௌரவிப்பட்டனர். இதில் அதிபர் வேல்சிவாந்தன், விளையாட்டுத்துறை முதல்வர் கமலமோகன், பயிற்றுநர் சுபாஸ்கரன் ஆகியோருடன் சாதனை வீரர்கள் நிற்பதைக் காணலாம்.

(93)

# 13ஆவது அரசியல் திருத்தத்தை மாற்றாமலே வடக்கில் தேர்தல்!

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.



பொதுபலசேனா என்ற புதிய இனவாத, மதவாத அமைப்பு அண்மைக்காலமாக இனவாதத்தைத் தூண்ட முற்பட்டதை அடுத்து இனவாத கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டியின் விளைவாக நாட்டில் பெரும்பான்மை ஆதிக்கவாதம் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. பலம் வாய்ந்த பலர் பின்புலத்தில் இருந்து அதற்கு உதவி புரிந்துவருவதால் இந்த வகுப்புவாத போக்கு மேலும் வலுப்பெற்றுவருகிறது.

இந்தநிலையில் விமல் வீரவன்ச மாகாணசபைகளின் அதிகாரங்களை பறிக்கவேண்டும் என்று கூறியபோது தாம் அதைவிட ஒருபடி முன் சென்று சிங்கள மக்கள் மத்தியில் வீரத்தை காட்டவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஹெலஉறுமயவின் தலைவர்களுக்கு ஏற்பட்டது. எனவே அவர்கள் அதிகாரங்களை குறைப்பதல்ல, மாகாண சபைகளுக்கு அடிப்படையாக உள்ள சட்டமான 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையே இரத்துச் செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள். இப்போது அதைவிஞ்சி எதையும் கேட்க வீரவன்சவால் முடியாமல் இருக்கிறது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்வதற்கான தனிநபர் சட்ட மூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஹெலஉறுமய கட்சி கூறுகிறது. அவர்கள் அச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால் இரண்டு பிரதான கட்சிகளையும் சேர்ந்த சிங்கள எம்.பீக்கள் அதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்றே ஹெலஉறுமய கூறுகிறது.

ஆனால் அரசாங்கம் அதனை விரும்பினால் மட்டுமே ஹெலஉறுமயவிற்கு அதனை சமர்ப்பிக்க இடமளிக்கும். அரசாங்கம் விரும்பாவிட்டால் ஹெலஉறுமய ஏதாவது சாக்குப்போக்குக் கூறி தமது சட்ட மூலத்தை ஒதுக்கிக்கொள்ளும். 2010ஆம் ஆண்டிலும் ஹெலஉறுமயவும் வீரவன்சவும் இதேபோல் மாகாணசபைகளை இரத்துச் செய்யவேண்டும் என்று கூறினார். ஆனால் அப்போது ஜனாதிபதி அதற்குத் தயாராக இருக்கவில்லை. எனவே வாயை மூடுங்கள் என்று அவர் கூறினார். அதே போல் அவர்களும் வாயை மூடிக் கொண்டனர். இதனை ஜனாதிபதியே இந்து பத்திரிகைக்கு கூறியிருந்தார்.

ஹெலஉறுமய மற்றும் மக்கள் விடுதலை முன்னணி தாக்கல் செய்த வழக்கை பாவித்து 2006ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரித்ததைப்போல் சிலவேளை அரசாங்கம் ஹெலஉறுமயவின் சட்ட மூலத்தைப் பாவித்து 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய முற்படுகிறதா என்றும் சிலர் சந்தேகிக்கலாம்.

ஆனால், சிலநாட்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மாகாணசபைகளின் அதிகாரங்களை குறைப்பதற்கான முயற்சிகளுக்கு எதிராக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுடன் கருத்து தெரிவித்து இருந்தார். அது இலங்கையின் இறைமைக்கு சவாலான கருத்து என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அதுதான் யதார்த்தம். அந்த யதார்த்தத்தைப் புறக்கணித்து இலங்கை அரசாங்கம் செயற்படவும் முடியாது.

இந்த விடயத்தில் அக்கறை செலுத்துவது இந்தியா மட்டுமல்ல. ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் இலங்கையின் அதிகார பரவலாக்கல் மற்றும் மாகாணசபை விடயங்களில் அக்கறை கொண்டுள்ளது. இரண்டு விஷயங்களை ஜெனிவா பிரேரணை வலியுறுத்தியிருந்தது. முதலாவதாக அது பொதுவாக இலங்கையில் அதிகார பரவலாக்கல் முறையை பலப்படுத்த வேண்டும் என்கிறது. இரண்டாவதாக அது குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வருடம் வாக்குறுதியளித்ததன் பிரகாரம் வடமாகாணசபைத் தேர்தலை இவ்வருடம் செப்டெம்பர் மாதம் நடத்தவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

அதாவது இலங்கை அரசாங்கம் தாமாகவோ அல்லது ஏதாவது ஒரு கட்சியை பாவித்தோ 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்தால் அது இந்தியாவுக்கு மட்டுமன்றி ஐ.நா. மனிதஉரிமை பேரவைக்கும் விடும் சவாலாகும். அந்த நிலைமையை அரசாங்கம் விரும்பாவிட்டால் ஒன்றில் ஹெலஉறுமயவிற்கு அதன் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இடமளிக்காது. இடமளித்தாலும் அதனை நிறைவேற இடமளிக்காது.

அரசாங்கம் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இடமளிக்காவிட்டாலும் ஹெல உறுமய அரசாங்கத்திலிருந்து விலகப்போவதில்லை. ஏதாவது சாக்குப் போக்குக் கூறி சமாளித்துவிடும். அதனால் அதன் ஆதரவாளர்கள் அக் கட்சியிலிருந்து பிரிந்துபோவதுமில்லை. அவர்களும் ஏதாவது கூறி நாளைப் போக்கிக் கொண்டு இருப்பார்கள்.

அரசாங்கம் இச் சட்ட மூலத்தை சமர்ப்பிக்க இடமளித்து அதனை நிறைவேறவும் இடமளித்தால் அரசாங்கமே அதன் பின்னால் இருக்கிறது என்றோ அல்லது குறைந்த பட்சம் அரசாங்கம் அதனை விரும்புகிறது என்றோ விளங்கிக் கொள்ளவேண்டும். ஆனால் அவ்வாறானதோர் நிலைமை இந்தியாவுடனான உறவை வெகுவாக பாதிக்கும் அபாயம் இருக்கிறது. அதேவேளை அடுத்தவருடம் இலங்கை - ஐ.நா. மனிதஉரிமை பேரவைக் கூட்டத்திலும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

# முதலாளித்துவ கொள்கைகளுக்கு கியுபா ஒரு சவால்

- அரிந்தம் சௌத்ரி கட்டுரையிலிருந்து.




ஏழைகளின் நிலையைப் போக்க எடுத்துக்கொண்ட பொருளாதார முயற்சிகளில் ஒரு நாடு எவ்வாறு ஒரு முற்போக்கான பாதையில் செல்லும் என்பதை கியூபா நிரூபித்து வருகிறது. வறியவர்களுக்கான ஒரு பொருளாதார அறிக்கை எவ்வாறு நாட்டின் பொருளாதார அடித்தளத்தையே மாற்றும் என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

உலகில் நிலவிய பனிப்போர் முடிந்த நேரம், பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக கருதிய சோஷலிச பொருளாதாரக் கொள்கையைக் காட்டிலும், முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையே வெற்றிக்கு உகந்தது என்ற கருத்தாக்கம் ஏற்பட்டது.

ஆனால் இந்த சுய தம்பட்ட முதலாளித்துவ மேலாண்மை உயர்வு மறைந்துவிட்டது. அமெரிக்கா பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் தவிக்கிறது. ஐரோப்பிய நாடுகளோ தங்களது யூரோ கூட்டணி நாடுகளைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ள பெரிதும் தவித்துவருகின்றன. அமெரிக்காவில் வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போன்ற பெரும் எழுச்சிகள் அனுதினமும் குலுக்கிக் கொண்டிருப்பதும், ஐரோப்பா முழுவதும் எழுச்சி கள் நடைபெறுவதும் முதலாளித்துவ பொருளாதாரத் திட்டம் குறித்த உண்மையை வெகுவாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இந்த வளர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் நிலவும் குழப்பம், ஒரு புதிய சோஷலிச பொருளாதார முறையை நோக்கி உலகை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

இந்த வெளித் தெரியாத மாற்றத்துக்கு தலைமை ஏற்றிருக்கும் கியூபா, அமெரிக்காவின் அனைத்து வகை எதிர்ப்புகளையும் ஏற்று அதற்கு எதிர்த் தாக்குதல் தொடுத்து, தற்போது உலகின் பல முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் பல்வேறு வகையில் பொருளாதார முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

அமெரிக்கா பல்வேறு வகையில் கியூபாவுக்கு செல்லக்கூடிய பல நாடுகளை, கார்ப்பரேட் நிறுவனங்களுடனான வர்த்தகப் போக்குவரத்தை தடுத்து வருவதுடன், ஜப்பானிலிருந்து மருத்துவ உபகரணங்கள், இத்தாலியிலிருந்து இரசாயனப் பொருட்கள், பிரான்சிலிருந்து எக்ஸ்ரே கருவிகள் இறக்குமதி செய்யப்படுவது உட்பட அனைத்துக்கும் தடைகளை உண்டாக்கி வருகிறது.

ஆனால், அமெரிக்காவின் இந்த தடங்கலை எல்லாம் மீறி கியூபா தனக்கென்று ஒரு வழிமுறையை உருவாக்கி, வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒரு கூட்டு முயற்சியை உண்டாக்கி தனது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான முதலீடுகளைப் பெற்று வருகிறது.

ஜேர்மனி, பிரான்ஸ், பிரேசில், கனடா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட அனைத்து நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டுத்திட்ட முயற்சியின் பலனாக கியூபாவின் திட்ட மதிப்பீடு 5 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது. இது தற்போது வளர்ந்து, 60 வெவ்வேறு நாடுகளிலுள்ள 40 துறைகளை உள்ளடக்கிய மொத்தம் 240 திட்டங்களாக பெருகியுள்ளது.

இதை கியூபா தன் சுயமுயற்சியில் சோஷலிச வழிமுறைகளில் சாதித்துள்ளது. அதன் காரணமாக அதன் பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு 9.6% தொட்டுள்ளது.

இன்னும் அதிகம் சொல்லலாம். ஆரம்பக் கல்வி தொடங்கி முனைவர் பட்டம் பெறும்வரை அனைவருக்கும் இலவசக் கல்வியை கியூபா உத்தரவாதம் செய்துள்ளது. அமெரிக்காவின் உளவுத்துறையான சிஐஏ-வின் fact book படி கியூபாவின் அண்டை முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமாக படிப்பறிவு 99% உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளது.

அதுபோல மருத்துவ வசதியை உறுதி செய்துள்ளது. ஆச்சரியப்படும் வகையில், கியூபா தனது நாட்டின் ஆண்டு நிதி நிலையில் 45 சதவீதத்தை மருத்துவத்திற்கும், கல்விக்கும் மட்டுமே ஒதுக்கீடு செய்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் அங்கமான உலக ஆரோக்கிய நிறுவனத்தின் (WHO) குழந்தை இறப்பு விகிதம் 1000இற்கு 4.7 என்ற விகிதத்தில் குறைந்திருப்பதாக பதிவு செய்துள்ளது. மேற்கத்திய நாடுகளில் பல நாட்டின் நிலைமையைக் காட்டிலும் சிறந்திருப்பதை உறுதி செய்கிறது.

இன்று முதலாளித்துவ நாடுகள் ஒரு சிறு பகுதியினருக்கு மட்டுமே பாதுகாப்புக் கொடுக்கிறது. கியூபா தனது சோஷலிசப் பாதையில், நாட்டின் அனைத்து மக்களையும் வறுமையிலிருந்து, வேலையின்மையிலிருந்து, நோயிலிருந்து காத்திருப்பது அசாதாரண சாதனையாகும்.

சோஷலிசக் கோட்பாட்டின் உள்ளடக்கத்தை முற்றாக பேணுவதுடன், தனது நாட்டின் வளர்ச்சிக்கான திட்டமிடுதலை அந்த நாட்டின் தொழிலாளர்களுடனும், உழைப்பாளர்களுடனும், உள்ளாட்சி அமைப்புகளுடனும் முற்றாக கலந்தாலோசித்த பின்னரே முடிவெடுக்கிறது கியூபா. அதுதான் உண்மையான சோஷலிசப் பாதையின் உள்ளடக்கம். அத்தோடில்லாமல் நேட்டோ அமைப்பிலுள்ள பிரான்ஸ் போன்ற நாடுகளையும், தன்னது சோஷலிச வழிமுறைகளை மாதிரியாகக் கொண்டு திட்டமிடும் அளவுக்கு ஊக்குவித்து வருகிறது.

கியூபா போல் உலகின் எந்த நாடும் தனது பொருளாதாரத் திட்டங்களை தனது நாட்டு தொழிலாளர்களுடன் கலந்து பேசி முடிவெடுப்பதில்லை. கார்ப்பரேட் நிறுவனங்களின் நண்பனான மனிதாபிமானமற்ற முதலாளித்துவக் கணக்கீடுகளை சார்ந்திராமல், நாட்டின் தொழிலாளர் வர்க்கத்துக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது நலனையே பேணி வருகிறது கியூபா.

முந்தைய சோவியத் ரஷ்ய கூட்டணித் திட்டங்கள் சரியானவையாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் சோஷலிசத்தின் மதிப்பு, சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியுடன் மூழ்கிவிடவில்லை. மாறாக, சரியான திட்டமிடுதலால், சோஷலிச கொள்கை இன்னும் வீறுகொண்டதாக எழும்.

மந்திர ஒலியால் கட்டுண்டு குழல் வாசிப்பவன் பின்னால் செல்லும் எலிகளைப் போல, பல்வேறு நாடுகளை தனது சோஷலிச கொள்கைத் திட்டங்கள் மீது ஈர்க்க கியூபாவால் முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

# டி.எம்.சௌந்தரராஜன் சுவையான குறிப்புகள்

டி.எம்.எஸ்.... தமிழ் மக்களைத் தனது காந்தர்வக் குரலால் கட்டிப்போட்ட எழிலிசை வேந்தன்: தமிழ் மொழியை அதற்கே உரிய அழகோடு தெள்ளத் தெளிவாக உச்சரித்துப் பாடிய பாடகன்!




◗ டி.எம்.எஸ். என்பதில் உள்ள "எஸ்" என்றால், சௌந்தரராஜன்; "எம்" என்பது அவரின் தந்தை மீனாட்சி அய்யங்கார்; "டி" என்பது அவரின் குடும்பப் பெயர் "தொகு-ளூர்". கர்ப்பம் தரித்திருக்கும் பெண்களுக்கு சத்து மா தயாரித்துத் தருவதில் பிரபலமான குடும்பம் அவருடையது!

◗ டி.எம்.எஸ்.இற்கு டி.எம்.எஸ்-ஸே சொல்லும் வேறு சில விளக்கங்கள் சுவையானவை. தியாகராஜ பாகவதர் (டி), மதுரை சோமு (எம்), கே.பி.சுந்தராம்பாள் (எஸ்) ஆகிய மூவரையும் தன் மானசீக குருமார்களாக வைத்திருப்பதையே இது குறிக்கிறது என்பார். தவிர, தியாகைய்யர் (டி), முத்துசாமி தீட்சிதர் (எம்), சியாமாசாஸ்திரிகள் (எஸ்) ஆகிய இசை மும்மூர்த்திகளின் அனுக்கிரகமும் தனக்குக் கிடைத்துள்ளதையே இது குறிப்பிடுகிறது என்றும் சொல்வார்!

◗ மதுரை வரதராஜப் பெருமாள் கோயிலில் பூசாரியாகப் பணியாற்றியவர் டி.எம்.எஸ்-ஸின் தந்தை மீனாட்சி அய்யங்கார்.

◗ டி.எம்.எஸ்ஸின் முதல் பாடல் "ராதே என்னை விட்டு ஓடாதேடி" (படம்: கிருஷ்ண விஜயம், இசை: சுந்தர்ராவ் நட்கர்னி) ஒலிப்பதிவான இடம் கோவை சென்ட்ரல் ஸ்ருடியோ 60 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு தொலைக்காட்சித் தொடருக்காக, மீண்டும் அங்கே போய், இடிபாடாகக் கிடந்த அதே பழைய ஒலிப்பதிவு அறையில் நின்று மீண்டும் அதே பாடலைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்!

◗ டி.எம்.எஸ்ஸின் முருக பக்தி அனைவருக்கும் தெரியும் "கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்...." "உள்ளம் உருகுதய்யா முருகா", "சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா", "மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன் போன்ற உள்ளம் உருக்கும் பலப்பல முருகன் பாடல்களுக்கு இசையமைத்துப் பாடியவர்!

◗ டி.எம்.எஸ். இசையமைத்துப் பாடிய "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" இன்றளவிலும் நேயர்களால் விரும்பிக் கேட்கப்படும் பக்திப் பாடல். இந்தப் பாடலில் ஒவ்வொரு பந்தியிலும் ஒரு குறிப்பிட்ட இராகத்தின் பெயர் இடம் பெறும். அந்தந்தப் பந்தியை அந்தந்த இராகத்திலேயே இசையமைத்துச் சாதனை செய்தார்!

◗ "அடிமைப் பெண்" படத்தின் போதுதான் டி.எம்.எஸ்ஸின் மகளுக்குத் திருமணம். "பாடி முடித்துவிட்டுத்தான் போக வேண்டும்" என்று எம்.ஜி.ஆர். உத்தரவிட்டும் கோபத்தில் கிளம்பிச் சென்றுவிட்டார் டி.எம்.எஸ். அந்தப் பாடல் வாய்ப்பு. அப்போதுதான் திரையுலகில் இளம் பின்னணிப் பாடகராக நுழைந்திருந்த எஸ்.பி.பாலசுப்பிரமணியனுக்குக் கிடைத்தது. அந்தப் பாடல்: "ஆயிரம் நிலவே வா!"

◗ பொது நிகழ்ச்சிகளுக்குத் தங்க நகைகள் அணிந்து செல்வதில் விருப்பம் உள்ளவர். "இல்லாட்ட ஒருத்தனும் மதிக்க மாட்டான்யா! "பாவம், டி.எம்.எஸ்.இற்கு என்ன கஷ்டமோ!"ன்னு உச்சுக் கொட்டுவான். அதனால, இந்த வெளிவேஷம் தேவையா இருக்கு" என்பார்!

◗ கவிஞர் வாலியைத் திரை உலகுக்கு அழைத்து வந்தது டி.எம்.எஸ். அந்த நன்றியை இன்று வரையிலும் மறவாமல். "இப்போ நான் சாப்பிடுற சாப்பாடு டி.எம்.எஸ் போட்டது" என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சொல்வார் வாலி!

◗ தனலட்சுமி என்ற பெண்ணைக் காதலித்தார். அவர்கள் சற்று வசதியான குடும்பம் என்பதால், டி.எம்.எஸ்-க்குப் பெண் தர மறுத்துவிட்டார்கள். காதல் தோல்வி பாடலைப் பாட நேரும்போதெல்லாம், அந்த தனலட்சுமியின் முகம் தன் மனக் கண்ணில் தோன்றுவதாகச் சொல்வார் டி.எம்.எஸ்!

◗ "கடவுள் பக்தி அதிகம் உள்ளவர் டி.எம்.எஸ். கண்ணதாசன் எழுதிய "கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்: அவன் காதலித்து வேதனையில் சாக வேண்டும்" என்ற வரிகளைப் பாட மறுத்துவிட்டார். பின்னர், கவிஞர் "சாகவேண்டும்" என்பதை "வாடவேண்டும்" என்று மாற்றித் தந்த பிறகே பாடினார்!

◗ "நவராத்திரி" படத்தில் சிவாஜி கணேசனின் ஒன்பது வித்தியாச வேடங்களுக்கு ஏற்ப தன் குரலை வித்தியாசப்படுத்திப் பாடியிருப்பார் டி.எம்.எஸ்!

◗ "பட்டினத்தார், அருணகிரிநாதர்" என இரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கிறார்!

◗ தமிழில் மட்டும் 10,000இற்கும் மேற்பட்ட சினிமாப் பாடல்களைப் பாடியுள்ளார். தவிர, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழி படங்களிலும் சில பாடல்களைப் பாடியுள்ளார். (அவ்ரே இசையமைத்துப் பாடிய பக்திப் பாடல்கள் மேலும் சில ஆயிரங்கள் இருக்கும்.)


◗ எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருக்கும் ஏராளமான பாடல்களைப் பாடியிருந்தாலும், அவர்களோடு ஒட்டாமல் தனித்தே கடைசி வரை இருந்தார் டி.எம்.எஸ். சொல்லப்போனால், இருவருக்கும் பலப்பல பாடல்களைப் பாடிய பின்புதான், அவர்களை ஏதேனும் விழாக்களில் நேரிலேயே சந்தித்திருக்கிறார்!

# அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்...

– மணிமேகலா –




தயிர் கடையிற மத்து. தயிரில் இருந்து வெண்ணையையும் மோரையும் பிரித்தெடுக்கப் பயன்படுவது.




பாக்கு வெட்டி! பாக்கு வெட்ட!! இப்ப காணக் கிடைக்குமோ தெரியாது! குறிப்பா வெளிநாட்டில பிறந்த தமிழ் பிள்ளையளுக்கு கட்டாயம் இது ஒரு புதினமாத்தான் இருக்கும்!



வெத்திலத் தட்டம்! வெத்திலை வைக்கப் பயன் படுவது. யாரும் வீட்டுக்கு வந்தால் முதலில் நீட்டப் படுவது.



வெத்திலைத் தட்டத்திற்கு அருகில் இருப்பது பூட்டுச் செம்பு. பாலோ தண்ணியோ ஊத்துப்படாமல் காவிச் செல்லலாம்.



விசிறி. பனையோலையில செய்யிறது. வெய்யில் காலத்தில வீசுக்கிறது.




★ பைபிளில் புதிய ஏற்பாடு எழுதியவர்களில் ஒருவரான புனித லூகாஸ் மட்டும்தான் யூதர் அல்லாதவர்.

★ மிகக் குறைந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி சாலமோன் தீவுகளில் பேசப்படும் மொழிதான். இதில் மொத்தம் 11 எழுத்துக்களே உள்ளன.

- பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் வழக்கம் 1647-ஆம் ஆண்டு தொடங்கியது.
- கொல்கத்தா தேசிய நூலகத்தில் தங்கத் தகடுகளால் ஆன திருக்குர் ஆன் ஒன்று உள்ளது.

★ லியோ டால்ஸ்டாய் எழுதிய "போரும் அமைதியும்" நாவலில் 500 பாத்திரங்களுக்கும் மேல் இடம்பெற்றுள்ளன. இதை அவர் ஏழுமுறை திருத்தி எழுதினார்.

- குதிரை லாயத்தில் வேலை செய்தவரின் மகன்தான் பிரபல ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்.
- எழுத்தாளர் எர்னஸ்ட் ஹெமிங்வே தம் வாழ்நாளில் பேனா பிடித்ததில்லை. பென்சில்தான்.
- உலகப் புகழ்பெற்ற டைம்ஸ் பத்திரிகையின் அட்டையை அலங்கரித்த முதல் நடிகர் சார்ளி சாப்ளின்.
- இந்திய மொழிகளில் தமிழில்தான் முதன்முதலாக அச்செழுத்துக்கள் உருவாகின.
- உலகின் மிக நீண்ட கவிதை மகாபாரதம் - மொத்தம் 30 இலட்சம் வார்த்தைகள் இருக்கின்றன.
- ஆங்கில ஒக்ஸ்போர்ட் அகராதியை கம்ப்யூட்டர் மூலம் ஒரே டிஸ்கில் பதிவு செய்துவிட்டனர். 5 கோடியே 90 இலட்சம் வார்த்தைகள், 24 இலட்சம் மேற்கோள்கள் பதிவாகி உள்ளனவாம்.

# நல்ல நோக்கத்துடன் செயற்பட்டால் முரண்பாடுகள் எதுவும் ஏற்படாது



நாம் அனைவரும் எமது சமூகம் எமது உறவுகள் என்ற நல் நோக்குடன் செயற்படுவோமாக இருந்தால் இவ்வாறான முரண்பாடுகள் உருவாகாது. விளையாட்டு வீரர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை, மனோதிடத்துடன் களமிறங்கினால் வெற்றியை தமதாக்கிக் கொள்ளமுடியுமென ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி சித்தி விநாயகர சனசமூக நிலையம், சன்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், ரேணுகா முன்பள்ளி என்பன இணைந்து நடாத்திய மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு நிகழ்வும் சனசமூக நிலையத் தலைவர் கலாநிதி தலைமையில் நடைபெற்றபோதே நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விளையாட்டுக் கழகங்கள் தம்மிடையே நல்லுறவை வளர்த்துக் கொண்டு சினேகபூர்வமாக போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும்.

வெற்றி - தோல்வி என்பது சகஜமானது இதற்காக கழகங்களிடையே முரண்பாடுகள் தோன்றுவதற்கு இடமளிக்கக் கூடாது. விளையாட்டு வீரர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை, மனோதிடத்துடன் போட்டிகளில் களமிறங்கினால் வெற்றியை தமதாக்கிக் கொள்ளமுடியும். இந்த சூட்சுமத்தை விளங்கிக் கொண்டவர்களாக வீரர்கள் வெற்றிப்படிகளை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து வெற்றியீட்டிய அணிகளிற்கான வெற்றிக் கேடயங்களை மாவட்ட அமைப்பாளர் கமல் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில், வேலணை பிரதேச சபை உறுப்பினர் தயானந்தம், பொலிஸ், இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# 116 வயது மூதாட்டி இலங்கையில் வாழ்கிறார்

## கின்னஸில் பதிவு செய்ய ஏற்பாடு



உலகின் மிகவும் வயது மூதிர்ந்த பெண் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பலத்கமுவ கெஹல்பன்னல என்னும் இடத்தில் வாழ்ந்து வரும் அப்புலெத்தா உக்குமஹாத்மிய என்ற பெண்ணுக்கு 116 வயது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனை கின்னஸ் உலக சாதனையாக பதியுமாறு அமெரிக்கா மற்றும் பிரத்தானிய அதிகாரிகளிடம் சட்டத்தரணி ஹேமந்த சிடுகே கோரியுள்ளார்.

உலகின் மிகவும் வயது முதிர்ந்த பெண் என்ற சாதனையை வழங்குவது குறித்து ஆராய கின்னஸ் அதிகாரியொருவரை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.தற்போது உலகின் வயது முதிர்ந்த பெண் என்ற கின்னஸ் சாதனையை, ஜப்பானைச் சேர்ந்த மியசோ ஒகாவா நிலைநாட்டியுள்ளார். இந்தப் பெண்ணுக்கு 114 வயது என்பது குறிப்பிடத்தக்கது.எனினும், இந்தப் பெண்ணை விடவும் உக்குமஹாத்மிய என்ற இலங்கைப் பெண்ணுக்கு இரண்டு வயது அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அடையாள அட்டை கண்டெடுப்பு




782034154V எனும் இலக்கமுடைய, முகமது முசமில் முகமது றிம்சான் என்னும் பெயருடைய 35/8 தெனியவத்த தயபன நீர்கொழும்பு எனும் முகவரியிலுள்ள ஒருவரின் தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தினமுரசு காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். (21)

# கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் புங்குருதீவு ஶ்ரீ பராசக்தி வித்தியாலயம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் உள்ள யாழ். புங்குடுதீவு ஶ்ரீ பராசக்தி வித்தியாலயம் பல வருடங்களாக இயங்காத நிலையில் காணப்படுகிறது. புங்குடுதீவு - குறிகட்டுவான் பிரதான வீதியில் இறுப்பிட்டிச் சந்தியில் இருந்து தென்புறமாக 2 கிலோ மீற்றர் உள்வரும் வீதியில் உள்ள இப்பாடசாலையில் பல கட்டட வசதிகள் இருந்தும் அது மீள இயங்கா நிலையில் உள்ளது.

கடந்த யுத்த காலத்தின் பின் 21 வருடங்களாக இயங்கா நிலையில் உள்ளதுடன், கட்டடங்களும் அழிவடையும் நிலையில் உள்ளது. யுத்தகாலத்திற்கு முன் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் இயங்கி வந்த நிலையில் தற்போது இப்பாடசாலை கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது.






இப்பிரதேசத்தில் உள்ள நூற்றுக்கணக்கான தரம் 1 தொடக்கம் 5 வரையுள்ள மாணவர்கள் இப்பாடசாலை இயங்காத நிலையில் பல கிலோ மீற்றர்களுக்கு தொலைவில் உள்ள புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கும் தொலைவில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும செல்லவேண்டியுள்ளதாக அக் கிராம பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது உள்ளூர் பிரதேசத்திற்கு தனியார், அரச பேருந்துகளின் போக்குவரத்து வசதி இல்லாமையால் தமது பிள்ளைகள் நடந்தே பாடசாலை சென்று கல்வி கற்கவேண்டிய அவலநிலை காணப்படுவதாக மேலும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிபர் அலுவலகத்துடன் ஒரு பெரிய வகுப்பறைக் கட்டடத்தைக் கொண்டதாகவும், மலசல கூடங்கள் சிதைவடைந்த நிலையிலும், ஒரு குடிதண்ணீர் கிணற்றினையும் கொண்ட இப்பாடசாலை மதுப்பிரியர்களின் தங்குமிடமாக தற்போது மாறியுள்ளது. அங்கு வெற்று பியர் போத்தல்கள், போத்தல்களின் கண்ணாடி துகள்கள் என்பவற்றைக் காணக்கூடியதாகவுள்ளதாகவும், சில சமயங்களில் மதுப் பிரியர்கள் இரவுப் பொழுதை இங்கே கழிப்பதாகவும் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே அழிவடையும் நிலையில் காணப்படும் இப்பாடசாலையினை மீள இயக்குவதன் மூலம் இப்பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை இலகுவாக பூர்த்தி செய்யலாம். அழிவடையும் நிலையில் காணப்படும் கட்டடங்களையும், பாடசாலைக் கூரையினையும், மலசல கூடங்களையும் திருத்தியமைத்து மாணவர்கள் கற்றல் வசதியை ஏற்படுத்தித்தர பெற்றோர்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர். (21)







தென்மராட்சி இலக்கிய அணியினரால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடாத்தப்பட்ட கம்பன் விழாவின் கலை நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழக முன்னைநாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற போது தலைவர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், இலக்கிய அணியினரால் வெளியிடப்பட்ட "கம்பனை கைபிடிப்போம" என்ற நூலை சட்டத்தரணி வேலாயுதம் தேசிய சேமிப்பு சாவகச்சேரி வங்கி சாவகச்சேரி கிளை முன்னாள் முகாமையாளர் இராசதுரை பெற்றுக்கொள்வதையும், கருத்தமர்வு நிகழ்வையும் காணலாம். (11)

# வவுனியாவில் பாடசாலைக் கட்டடத்தொகுதி வடமாகாண ஆளுநரால் திறந்துவைப்பு



(வவுனியா)

வவுனியா போகஸ்வெவ வித்தியாலய கட்டடத்தொகுதியும்,ஆசிரியர் விடுதியும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் 10 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைக் கட்டடங்கள், ஆசிரியர் விடுதி, சுற்றுவேலி, கிணறு, மலசல கூடத் தொகுதி என்பன ஆளுநரின் வழிகாட்டலில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் ஆளுநரினால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமயத் தலைவர், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்திய சீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா, வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.அன்ரன்சோமராஜா, கல்வி உயர் அதிகாரிகள், இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

இதேவேளை,வவுனியாவிலுள்ள. 'சிசிறிய செவன' சிறுவர் இல்லத்திற்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அங்குள்ள தேவைகளை ஆய்வு செய்தார்.

இதன்போது அங்குள்ள சிறுவர்களுக்கு வெசாக் தினத்தை முன்னிட்டு பரிசில்கள் வழங்கினார். அத்துடன் குறித்த சிறுவர் இல்லக் கட்டடத்தினை புனரமைப்பு மேற்கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது புனரமைப்பிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநரினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. இதற்காக வட மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு திணைக்களத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவினை வழங்க ஆளுநர் உறுதியளித்துள்ளார். அத்துடன் குறித்த சிறுவர் இல்லத்திலிருந்து மாணவர்கள் பாடசாலைக்கு சென்றுவர பேருந்து வசதி ஏற்படுத்தித்தருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருமதி.ஜி.ஏ.சந்திரசிறி, வவுனியா மாவட்ட பிராந்திய ஆணையாளர் ஐ.எஸ்.எம்.மொகைதீன், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு திணைக்கள முன்னாள் ஆணையாளர் ரி.விஸ்வரூபன், வவுனியா மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கே.உதயராஜ், வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.மகேந்திரன், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.



# ஆலயங்களின் உண்டியல்களும் திருடர்களிடமிருந்து தப்பவில்லை

## – வவுனியாவில் தொடரும் கைவரிசை

வவுனியாவில் தொடர்ந்தும் திருடர்கள் கைவரிசையைக் காட்டிவரும் நிலையில் கடந்த சனிக்கிழமை வவுனியா - கண்டி வீதியில் உள்ள பௌத்த விகாரையின் உண்டியல் திருட்டுப்போயுள்ளது. வெசாக் தினத்தில் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்று வரும் இவ் விகாரையில் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை உட்பட பொலிஸ் அதிகாரிகளின் அலுவலகங்கள் நிறைந்த இப்பகுதியில் மக்கள் அதிகளவில் வெசாக் தினத்திற்காக பிரசன்னமாகியிருந்த சூழலில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் பலரும் வியப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வைரவபுளியங்குளம் வைரவர் கோவில் உண்டியலும் திருடர்களால் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் அனைத்தும் திருடப்பட்டுள்ளது. இவ் ஆலயத்தில் திருவிழா ஆரம்பித்துள்ள நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விரு மத தலங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(160)

# யாழ். முஸ்லிம் சம்மேளனத்தின் புதிய நிர்வாகம் தெரிவாகியது



(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் விசேட பிரதிநிதிகள் கூட்டமும், புதிய நிாவாகிகள் தெரிவும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் முன்னாள் தலைவர் கே.எம். நிலாம் தலைமையில் நடைபெற்றன.

புதிய நிர்வாகிகளாக தலைவர் ஏ.எம்.ஜமால், செயலாளராக எம். சுனீஸ்கான், உபதலைவராக எம். ஹஸ்ஸான், உபசெயலாளராக மீ.லாபீர் பொருளாளராக எம்.சுபுஹான் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் செயற்படுவார்கள். கே.எம்.நிலாம், எம்.யூ.எம் தாஹிர் எம்.ஏ.ஜி முபீன், ஐ.அஸ்மின் எம். அஜ்மல், எஸ். முஜாஹித், எம். லீயூசின், எம். எம். ரமீஸ், ராஜு அமீன் ஹாகி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த காலத்தில் சம்மேளனம் பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்தின. குறிப்பாக இந்திய வீட்டுத்திட்ட விவகாரத்தில் முன்னாள் தலைவர் உட்பட ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் கடுமையாக உழைத்துள்ளார்கள். அவர்களுக்கான வாழ்த்தைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் மேலும் யாழ். முஸ்லிம் மக்களுக்கு மீள்குடியேற்றம், மற்றும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க அனைவரும் ஆதரவு வழங்க வேண்டுமென புதிய தலைவர் கேட்டுக்கொண்டார்

(105)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு புனைவில் கவிஞனின் கண்கள் எங்கு பதிந்திருக்கின்றன. அவை எதை அழிக்கோடிடுகின்றன என்பதைப் பார்ப்பது எனக்கு மிக சுவாரசியமான அனுபவம். நவீன கவிதையில் துல்லியமான நிலவியல் அடையாளத்துடன் சமகால வாழ்வின் உக்கிரமான சித்திரங்களாலான யதார்த்தத்தை தீவிர அங்கதத்துடன் முன்னுரைத்தவை கலாப்ரியாவின் கவிதைகள். புனைகதையில் புதுமைப்பித்தனுக்கு சமமான சாதனை இது. மற்றவர்களும் மற்றவையின் இருப்பும் துள்ளத்துடிக்க இவர் கவிதைகளில் தான் முதலில் இடம்பிடித்தன. தன்கால வாழ்வுக்கு எதிர் வினையாற்றி, ரௌத்ரம் கொண்ட தமிழ் இளைஞன் ஒருவனின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் முதல் வெளிப்பாடு அது. மாறும் காலத்தின் கோலத்தில் சகலமும் எனக்கு ஊறுவிளைவிக்கலாம் என்று பசியற்ற காகங்களைத் தன் மூளையைக் கொத்த அனுமதித்தவர் கலாப்ரியா. பிறரின் துக்கம் தன் அனுபவத்தின் மீது ஏறி கலவரம் புரிய, புறக்கடைகளில் நரகலையும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளையும் மிதித்தபடி சோரங்கள், இழப்புகள், அபத்தங்களை, மறைபகுதிகளை தரிசிக்க நேர்ந்த வலியிலிருந்து இரத்தத்தால் எழுதப்பட்டவை அவர் கவிதைகள்.

நினைவுதான் மரணத்தைவிட நம்மை வெகுவாகப் பீதியூட்டுவது, கலாப்ரியாவின் சசி குறித்த நினைவுதான் அவரது மொத்தப் படைப்புலகுக்கான முன்னிலை. சசி கிடைக்காத துக்கம், மரண பீதி போன்று அவரை வெளியே விரட்டி சகலவற்றின் மீதும் படிந்து, சகலரின் துக்கத்தையும் அவர் துக்கமாக மாற்றுகிறது. அது தோல் உரிந்த நிலை. கிட்டத்தட்ட பைத்தியத்திற்கு பக்கத்தில் உள்ள நிலை. கலாப்ரியா மிகுந்த உயிர்ப்புடன் படைப்பாக்கத்தில் ஈடுபட்டிருந்தபோது எழுதிய கவிதைகள் இப்போது வாசிக்கும் வாசகனைக்கூட நிலைகுலையச் செய்யும் வன்முறையும் தீவினையின் வேகமும் கொண்டவை. **– ஷங்கர்ராமசுப்ரமணியன்**

கவிதை என்பது நிச்சயமாக அறியப்படாதவற்றை எதிர்கொள்வதுதான். கவிதையைப் பற்றிய விஷயம் என்னவென்றால், நீங்கள் அதை சரியாகப் பெறவேண்டும். எல்லாமே சரியாக வரவேண்டும். அதில் ஒரு வார்த்தை சரியில்லாமல் போனாலும், அதன் முழுமையும் தோற்றுப் போகும். அது 500 வரிகளோ, 5 வரிகளோ, அது பிரச்சினை இல்லை. சரியாக வராத அந்த வார்த்தையுடன் நீங்கள் மாட்டிக்கொள்வீர்கள். எல்லா வார்த்தைகளும் அவற்றின் சரியான இடத்தில் பொருந்தாதவரை, கவிதை முழுமையடையாது என்று நீங்கள் உணர்வீர்கள். அது ஒரு விசித்திரமான கலவை.


**– அல் அல்வரெஸ்**

கவிதை தமிழில் இருக்கலாம். ஆனால் கவிதையைப் பற்றிய ஆராய்ச்சி தமிழில் கிடையாது. தமிழில் செய்யுளியலைப் பற்றி ஆராய்ச்சி இருந்திருக்கிறது. அதாவது கவிதையின் வடிவத்தை [Form] பற்றி நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள். கவிதைக்குத் தமிழ் யாப்பிலக்கணத்தைப் போல் இயற்கையான அமைப்பு வேறு கிடையாதென்றே கூறி விடலாம். ஆனால் கவிதை என்றால் என்ன என்று தமிழர்கள் ஆராயவே இல்லை. **– புதுமைப்பித்தன்**

ஒரு நல்ல கவிதை, எதை அது சொல்லிற்றோ அது ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டது என்ற வருத்தத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. எதை அது சொல்ல விரும்புகிறதோ அதைச் சொல்ல முடியாமல் இருப்பதும் அதற்குத் தெரியும். உண்மையான மேலான கவிதை ஒன்றை, யாரோ ஒருவன், எங்கோ ஓரிடத்தில் புனைந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் அது வாழ்ந்து கொண்டிருக்கிறது. **– சீதாகாந்த் மகாபத்ர**

பெயர்களை நீக்கிவிட்டால் எல்லாக் கவிதைகளுமே ஒரே கவிஞனின் வரிகள் போலவே இருக்கிறது – 'திருவல்லிக்கேணியின் பேச்சுலர் அறைகளைப் போல. திருமணமாகி வாழ்வில் 'செட்டில்' ஆகிவிட்டால் நிறைய பேர் கவிதை எழுதுவதையே நிறுத்திவிடுவார்கள் போல் தோன்றுகிறது. அதுவரை பெண்களே இல்லாத வறட்டு வாழ்க்கையால் சபிக்கப்பட்ட கவிதைகளை இவர்கள் எழுதிக்கொண்டிருப்பார்கள். ஆனால் இந்தத் தேசத்து அரசியல்வாதியையும், தொழிலதிபர்களையும், சினிமாக்காரர்களையும் நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள் வாரத்தில் நான்கு பெண்களை 'சந்திக்கிறார்கள்'. ஆனால் பாவம் – தமிழ்க்கவிஞன். இந்தச் 'சந்திப்பு' அவனுக்கு நேர்வதேயில்லை. சாலையோரங்களிலும், அலுவலக வராந்தாக்களிலும் முந்தின இரவு நிகழ்ந்த அவலமான கலவியின் சாட்சியாகக் கிடக்கும் ஆணுறைகளைப் போல் கிடக்கின்றன இவர்களின் கவிதைகள்!

**– சாரு நிவேதிதா**



# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



**அளவையியலும் விஞ்ஞானமுறையும்**

திரு.பிரதீபன் .- பரியோவான் கல்லூரி

## பகுதி 1

01) "இடைமாறு" தொடர்பினை வெளிப்படுத்தி நிற்கும் கூற்று எது?

1) A யின் தந்தை B : B யின் தந்தை C
2) A யின் எதிரி B : B யின் எதிரி C
3) A யின் நண்பன் B : B யின் நண்பன் C
4) A யிலும் B பெரிது : B யிலும் C பெரிது
5) A யின் சகேதரன் B : B யின் சகோதரி C

02) விஞ்ஞானம் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) சோதனையின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவாகும்.
2) பௌதிக அதீத அறிவாகும்.
3) விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடாகும்.
4) விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி உருவாக்கப்படும் அறிவாகும்.
5) 15 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து ஐரோப்பாவில் துரிதமாக வளர்ச்சி அடைந்த அறிவின் பகுதியாகும்.

03) "அழகியல்" என்பது

1) விடய விஞ்ஞானம்
2) விபரிப்பு விஞ்ஞானம்
3) விடயி விஞ்ஞானம்
4) சமூக விஞ்ஞானம்
5) இயற்கை விஞ்ஞானம்

04) வாய்ப்புப் பார்த்தல் அல்லது பொய்ப்பித்தலை விஞ்ஞானத்தின் முறையாகக் கொள்வதற்கு காள் பெப்பரிற்கு இருந்த ஒரு காரணம்

1) வாய்ப்புப் பார்த்தலுக்கு அவதானம் தேவை.
2) அளவையியல் ரீதியில் வலிதான வாதத்தினை முறையியல் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
3) விஞ்ஞான அறிவு பொய்யேயன்றி ஒருபோதும் உண்மையானதல்ல.
4) வாய்ப்புப் பார்த்தலுக்கு பல பரிசேதனைகள் தேவை.
5) தர்க்க ரீதியான உண்மைகள் விஞ்ஞான ரீதியானவை அல்லாதிருப்பதனால்.

05) "அவன் வழுக்கல் தலை உடையவனாகவும் அதேநேரம் வழுக்கல் தலை அற்றவனாகவும் இருக்க முடியாது" எனும் கூற்று உண்மையாவதுடன் தொடர்புபடுவது

1) ஒருமை விதி
2) எதிர்மறை விதி
3) புரணாமை விதி
4) இரட்டை மறுப்பு விதி
5) போதிய நியாய விதி

06) "உலகம் நீரினால் ஆனது" எனக் கூறியவர்

1) தேலிஸ்
2) அனெக்சி மாந்தர்
3) அனக்சிமினஸ்
4) டேக்காட்
5) ஹெரக்கிளைட்டஸ்

07) பௌதிக விஞ்ஞானத்திற்குள்ளும் சமூக விஞ்ஞானத்திற்குள்ளும் ஒருங்கே உள்ளடக்கும் துறை.

1) உளவியல்
2) மானிடவியல்
3) புவியியல்
4) இரசாயனவியல்
5) வெப்பவியல்

08) பின்வருவனவற்றுள் எது நற்சூத்திரம் அல்லாதது

1) $N(NP \rightarrow Q)$
2) $[PV\ QVR]$
3) $(P \rightarrow Q \rightarrow R)$
4) $(P \wedge N\ Q)$
5) $\{P \rightarrow [Q \leftrightarrow R\ (-) \rightarrow 5)]\}$

09) "கைவினைவாத மரபும் புலமைவாத மரபும் ஒன்றிணைவதன் அவசியத்தை" ஒரு தீர்க்கதர்சியைப் போல வலியுறுத்தியவர்.

1) டேவிட் ஹியூம்
2) லைபினிஸ்ற்
3) விக்கன்ஸ்ரைன்
4) பிரான்சிஸ் பேக்கன்
5) டேக்காட்

10) $N(NP \rightarrow Q)$ எனும் வாக்கியத்திற்கு தர்க்க ரீதியாக சமனான வாக்கியமாக அமைவது

1) $(P \leftrightarrow Q)$ 2) $(NPnNQ)$ 3) $(NPVN6)$
4) $N\ (P \rightarrow NQ)$ 5) $[(PnQ) \rightarrow NQ]$

11) "கருவியின்" அவசியமாக அமையாதது

1) அளவிலுக்கு
2) பரிசோதனைக்கு
3) அவதானத்திற்கு
4) தனியாள் ஆய்விற்கு
5) அகழ்வாய்விற்கு

12) எல்லா மாணவர்களும் புத்திசாலி எனின் ஒவ்வொரு மாணவரும் புத்திசாலி என்பது

1) முறையான மறுமாற்றம்
2) முறையற்ற நேர்மாற்றம்
3) முறையற்ற எதிர்வைக்கை
4) முறையற்ற மனுமாற்ற நேர்மாற்றம்
5) முறையற்ற மறுமாற்ற எதிர்வைக்கை.

13) விற்தராசிற்கு அடிப்படையாக அமைவது

1) சார்ள்சின் விதி
2) ஹீக்ஸின் விதி
3) கலிலியோவின் விதி
4) உலோகம் விரிவடைவது
5) புவியீர்ப்புக் கோட்பாடு

14) விஞ்ஞானத்தில் தொடர்புவாதம் எனும் கருத்தை முன்வைத்த விஞ்ஞான முறையியலாளர் பெயர்

1) கான்பொப்பர்
2) தோமஸ்கூன்
3) லக்காதோஸ்
4) கான்ஹெம்பல்
5) பெயிராபெண்ட்

15) "இருமதிப்பு அளவையியலில் மாறிகள் நான்கினைக் கொண்ட உண்மை அட்டவணையின் பெறுமதிகளின் எண்ணிக்கை


1) 2 2) 4
3) 8 4) 16 5) 32

16) எழுவாயும் பயனிலையும் முறையே வியாபத்தி அல்லாமலும் வியாபத்தியாகவும் இருக்கும் வரிசை ஒழுங்கானது

1) நிறை விதி எடுப்பு 2) நிறை மறை எடுப்பு
3) குறை விதி எடுப்பு 4) குறைமறை எடுப்பு
5) தனி விதி எடுப்பு

17) பொயிலின் விதி -
1) தனி நேர்வாகும்.
2) கொள்கையாகும்.
3) அனுபவ பொதுமையாக்களும் ஆகும்.
4) புள்ளிவிபரவியல் பொதுமையாக்கம் ஆகும்.
5) வெப்பநிலை மாற்றமடையும்போது பொருந்துவதில்லை.

18) பின்வருவனவற்றுள் சமூக விஞ்ஞானங்கள் எவ்வகை சோதனையை அதிகமாக பயன்படுத்திக்கொள்ளும்.
1) அவதானம்
2) பரிசோதனை
3) தீர்ப்புசோதனை
4) கட்டுப்பாட்டு குளுமுறை
5) தனியாள் ஆய்வுமுறை

19) 


என்ற வெண்வரைபடத்திலிருந்து பின்வருவனவற்றில் எது வலிதான முடிவு எனக்கூறுக.
1) A = w 2) xy ∉ A 3) y ∉ B
4) B = ⊙ 5) A ∉ O

20) நீள்வட்ட வடிவிலான பாதை எந்தக் கோளிலிருந்து முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.
1) செவ்வாய் 2) புதன் 3) வியாழன்
4) வெள்ளி 5) சந்திரன்

21) "நாகமும், புடையனும் ஆபத்தானது ஆகவே நாகமெல்லாம் புடையனாகும்" எனும் வாதத்தில் இடம்பெறும் போலி
1) நாற்பதப் போலி
2) இருகூற்றுப் போலி
3) பெரும்பதசட்டவிரோதப் போலி
4) சிறுபதசட்டவிரோதப் போலி
5) மத்தியபதப் போலி

22) நியூட்டனின் புவியீர்ப்புக் கோட்பாடு விளக்குவது
1) எரிநட்சத்திரக்கல்லினை
2) பொயிலின் விதியினை
3) சூரியமையக்கோட்பாட்டினை
4) கெப்ளரின் விதிகளை
5) வியாழக்கிரகத்தின் சந்திரன்களை


23) பின்வரும் கூற்றுக்களில் "சரியானது" எது
1) நேர்ப் பெறுகையில் மட்டுமே துணைப்பெறுகை பயன்படுத்தப்படும்.
2) நிபந்தனைப் பெறுகையில்தான் எடுகோள் முன்வைக்கப்படுகிறது.
3) நேர்ப்பெறுகையில் மட்டும்தான் எடுகோள் பயன்படுத்தப்படுகிறது.
4) சரிவு நிபந்தனை வாக்கியமாக இருக்கும்போது மட்டுமே நிபந்தனைப் பெறுகை பயன்படுத்தப்படுகிறது.
5) துணைப் பெறுகை நிறைவு பெற்றவுடன் பிரதான பெறுகை நிறைவு பெற்றுவிடும்.

24) 13 வரையான இரட்டை எண்களின் இடையமாக அமைவது
1) ஓர் ஒற்றை இலக்கம்
2) 6
3) முழுமையின் அரைவாசி
4) ஓர் இரட்டை இலக்கம்
5) 8


25) "பெண்களைத் தவிர வேறெவரும் தாய்மை உடையார் அல்லர்" என்ற எடுப்பின் சரியான எடுப்பு வடிவம்
1) பெண்கள் மட்டுமே தாய்மை உடையவர்
2) தாய்மை உடையவர் மட்டுமே பெண்கள் ஆவர்.
3) பெண்கள் எல்லோரும் தாய்மை உடையவர் ஆவர்.
4) தாய்மை உடையவர் எல்லோரும் பெண்கள் ஆவர்.
5) சில பெண்கள் தாய்மை உடையவர்.


26) சேர்தல் விதி, மறுத்து விதித்தல் விதிகள் இரண்டும் பின்வருவனவற்றில் எவ்வாக்கியத்திற்கு பொருத்தப்பாடுடையது
1) உட்கிடை
2) இணைப்பு
3) உறழ்வு
4) இரட்டை உட்கிடை
5) மறுப்பு

27) பின்வரும் படலத்தின் வெளியீட்டைச் சரியாகக் குறிப்பிடும் சூத்திரம் எது?



1) [(P n Q) V N (PVQ)] 2) [ (PAQ) V (PVQ)]
3) [N(P n Q) V (PVQ)] 4) (PnQ) V N (PVR)
5) [(P → Q) V N(P→ NQ)]

28) (NPVN Q) என்பதன் உண்மை விருட்சம்
1) NP
2) 


3) NP
Q
4) P
NQ
5) 



29) புறவயத் தன்மை என்பதன் மூலம் கருதுவது
1) புறஉலகில் மட்டும் இருக்கின்ற ஒன்றாகும்.
2) அனைவராலும் ஏற்கக்கூடியது.
3) பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவது
4) நூறுவீதம் துல்லியமானது.
5) சோதிக்கப்படக்கூடியது.


30) பால்வெளியிலிருந்து ஏனைய அசைகின்ற நட்சத்திரக் கூட்டத்தினைக் கண்டுபிடித்தவர்.
1) சேர்ஹெட்மண்ட் ஹெலி
2) எட்வின் அபல்
3) ஜோர்ஜ்கெமவ்
4) சேர் பிரட்ஹொயில்
5) சிறிஸ்டியன் ஹெப்ளர்


31) நியூட்டன் தனது முதலாவது விதியினால் வெளிப்படுத்துவது
1) வலு என்பதன் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
2) உட்கிடையாக்கத்தின் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
3) வலுவின் விசாலத்தன்மையினை நிர்ணயம் செய்வதற்கான முறை ஒன்றினை எடுத்துக்காட்டுவது.
4) நிலையான அசைவு நேர்கோடொன்றின் நிலையான வேகத்தில் நிகழ்கின்றது என்பதனைக் காட்டியமை.
5) ஈர்ப்பின் திணிவினை நிலையான திணிவிலிருந்து வேறுபடுத்துவதாகும்.


32) பின்வருவனவற்றுள் எது மூடிய உண்மை விருட்சமுறைக்கு அமைவாக உள்ளது?
1) (P n Q) P : NQ
2) (PV Q) Q : NP
3) (NP→Q) NQ: P
4) (NP →Q) (QVR) NP : R
5) (P →Q) (QnR) : (PnR)

33) பின்வரும் தர்ப்படலைகளுள் எது (P → Q) எனும் வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது.
1) 

2) 

3) 


4) 


5) 


34) சமூக விஞ்ஞானத்தில் நேரடியாக பயன்படுத்த முடியாத நவீன தொழில்நுட்பம் எது?

1) DNA தொழில்நுட்பம்
2) கணனித் தொழில்நுட்பம்
3) தகவல் தொழில்நுட்பம்
4) விண்வெளி ஆய்வுத் தொழில்நுட்பம்
5) கதிரியக்கத் தொழில்நுட்பம்

35) லாவோசியரின் தகனம் பற்றிய பிராணவாயுக் கோட்பாட்டினைப் போன்று வோல்டன் அணுக்கோட்பாடு பின்வருவனவற்றுள் எதில் கவனம் செலுத்தப்பட்ட தால் பெறப்பட்டது.

1) அணுக்கள்
2) வெப்பம்
3) இரசாயனத் தொகுதி
4) நிறை
5) புலொஜிஸ்டன்

36) "மாணவர் மட்டுமே புத்திசாலி" என்பதைக் குறித்து நிற்கும் சரியான குறியீட்டு வாக்கியம்

1) $A\dot{B} = \odot$
2) $AB = \odot$
3) $AB \neq \odot$
4) $A\dot{B} \neq \odot$
5) $\dot{A}B = \odot$

37) இந்திய அளவையியலில் பரார்த்த அனுமானத்தில் காணக்கூடிய அனுமானப் படிமுறைகள் மொத்தம் எத்தனை?

1) 2    2) 3
3) 5    4) 6    5) 7

38) சமூக விஞ்ஞான ஆய்வில் வினாக்கொத்து முறை

1) ஒரு பரிசோதனையாகும்.
2) நேர்முக விசாரணை முறை சாத்தியமில்லாத நிலையில் மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
3) மாதிரியினைப் பயன்படுத்துவதில்லை.
4) பரந்தளவிலான விடையப் பரப்பிலிருந்து தரவுகளைத் திரட்டிக்கொள்ளப் பயன்படும்.
5) தொலைபேசியினூடாக செயற்படுவதில்லை.

39) எந்த ஒரு காகமும் நான்கு காலுடைய விலங்கு அல்ல என்பதன் சரியான குறியீட்டாக்கம்

1) $\wedge x\ fx \rightarrow Gx$
2) $\wedge x\ Fx \rightarrow x\ Gx$
3) Vx (Fx n Gx)
4) $\wedge$x (F x n Gx)
5) $Fx \rightarrow NGx$

40) உள்பொருள் தனியனாக்கத்தில் புதிய மாறி பயன்படுத்தப்படவேண்டுமாயின் Vx (Fy $\wedge$ Hx) என்பதற்கு பின்வருவனவற்றுள் எது பொருத்தமானது

1) (Fa $\wedge$ Hx)
2) (Fy $\wedge$ HB)
3) (Fx $\wedge$ Hy)
4) Fy $\wedge$ Hq)
5) (Fa $\wedge$ Ha)

41) முற்கூற்று நியாயத்தொடையில் சிறுமதப் போலி நிகழ்வதற்கு

1) முடிவு விதி எடுப்பாக இருப்பது அவசியம்
2) முடிவு மறை எடுப்பாக இருப்பது அவசியம்
3) முடிவு குறை எடுப்பாக இருப்பது அவசியம்
4) முடிவு நிறை எடுப்பாக இருப்பது அவசியம்
5) முடிவு நிறை, குறை எடுப்பாக இருப்பது அவசியம்

42) கீழ்வரும் விஞ்ஞானிகளில் பரிணாமவாதக் கோட்பாட்டுடன் நேரடியாக தொடர்பு இல்லாதவர் யார்?

1) சார்ஸ் டார்வின்
2) எஸ்மஸ்டார்வின்
3) லாமார்க்
4) தோமஸ் ஹக்ஸ்லி
5) லீனியஸ்

43) சமயம் மற்றும் ஒழுக்கவியலிற்கு ஒரே நேரத்தில் பிரச்சினையினை ஏற்படுத்தாத தொழில்நுட்ப செயற்பாடு

1) குளோனிங்
2) பிறப்புரிமை தொழில்நுட்ப
3) சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளல்
4) சுகமரணம்
5) சந்திரனை வெற்றி கொள்ளல்

44) நவீன மெய்யியலின் தந்தை யார்?

1) டேவிட் கியூம்
2) ஜோன்லொக்
3) டேக்காட்
4) ஸ்பினோசா
5) விக்கன்ஸ்ரைன்

45) "பிரபஞ்ச தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் காற்று" எனக் கூறிய மெய்யியலாளர்

1) தோல்ஸ்
2) அனெக்சி மாந்தர்
3) அனெக்சி மினஸ்
4) ஹெரக்கிளைட்டஸ்
5) டேக்காட்

46) விஞ்ஞானத்தின் தாய் விஞ்ஞானம் என அழைக்கப்படுவது

1) மெய்யியல்    2) சமூகவியல்
3) பௌதிக விஞ்ஞானம்    4) ஒழுக்கவியல்
5) அழகியல்

47) அனுபவ முதல்வாத சிந்தனையாளர்களில் ஒருவராக கருதக்கூடியவர்

1) டோக்காட்
2) லைபினிஸ்ற்
3) ஸ்பினோரா
4) ஜோன்லொக்
5) அரிஸ்ரோட்டில்

48) அறிவுமுதல்வாத சிந்தனையாளர்களில் ஒருவராக கருதக்கூடியவர்

1) டோக்காட்
2) ஜோன்லொக்
3) டேவிட்ஹியூம்
4) பாக்ஸி
5) விக்கன்ஸ்ரைன்


49) "பிரமச்சாரிகள் திருமணமாகாதவர் அல்லர்" என்பது

1) பகுப்பெடுப்பு
2) தொகுப்பெடுப்பு
3) கூறியது கூறல் எடுப்பு
4) முரண்பாட்டெடுப்பு
5) குறைமறை எடுப்பு

50) "சென். ஜோண்ஸ் சிறந்த கல்லூரி" என்பது நாற்பிரிவுத் திட்டத்தில்

1) நிறைவிதி    2) நிறை மறை
3) குறை விதி    4) குறை மறை
5) தனி விதி

# ஜப்பான் மற்றும் தாய்லாந்துக்கு இந்தியப் பிரதமர் விஜயம்



பிரதமர் மன்மோகன்சிங் 5 நாள் பயணமாக ஜப்பான் மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கு நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளார். அவருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், பிரதமரின் முதன்மை செயலாளர் புலோக் சாட்டர்ஜி மற்றும் மூத்த அதிகாரிகள் குழுவும் சென்றுள்ளனர். ஜப்பான் செல்லும் பிரதமர் மன்மோகன்சிங் அந்நாட்டு தலைநகர் டோக்கியோவில் தங்குகிறார். அங்கு 3 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

அப்போது ஜப்பான் அதிகாரிகளுடன் அணுசக்தி பாதுகாப்பு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்துகிறார். இன்று ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபேயை சந்திக்கிறார். அப்போது இராணுவம், பொருளாதாரம், மின்சாரம் உள்ளிட்ட பல துறைகள் குறித்தும் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

மேலும் ஜப்பானில் தொழில் அதிபர்களின் கூட்டம் நடக்கிறது. அதில் கலந்து கொள்ளும் பிரதமர் மன்மோகன்சிங் இந்தியாவில் தொழில் தொடங்க வரும்படி ஜப்பான் தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுக்கிறார். ஜப்பானில் இருந்து நாளை மறுதினம் தாய்லாந்து தலைநகர் பாங்காக் புறப்பட்டு செல்கிறார். அங்கு 2 நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 31ஆம் திகதி டில்லி திரும்புகிறார்.

ஜப்பான் புறப்படும் முன் பிரதமர் மன்மோகன்சிங் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் கூறியிருப்பதாவது,

எனது ஜப்பான் மற்றும் தாய்லாந்து பயணம் இந்தியாவின் கிழக்கு நாடுகளின் கொள்கையில் புதிய அர்த்தத்தை ஏற்படுத்தும். ஆசியா பசிபிக் பகுதியில் அமைதி, சமாதானம் ஸ்திரதன்மை மற்றும் வளமையை ஏற்படுத்தும் என நம்புகிறேன். தற்போது ஜப்பானில் புதிய அரசு நல்ல நண்பரான பிரதமர் அபேயின் தலைமையில் நடந்து வருகிறது. அவரது அரசு இந்திய - ஜப்பான் இடையே நல்லுறவை ஏற்படுத்தும். தாராள பொருளாதாரமயத்தை பயன்படுத்தி ஜப்பான் தொழில் அதிபர்கள் இந்தியாவில் தொழில் தொடக்க வாருங்கள். எப்போதும் இல்லாத அளவு ஏற்கனவே இந்தியாவில் ஜப்பான் நிறுவனங்கள் பெருமளவில் செயறபடுகின்றன. இங்கு மாருதி சுசுகி உள்ளிட்ட நிறுவனங்கள் உள்ளன.

டில்லி மெட்ரோ இரயில் பணிகளை ஜப்பான் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அது போன்று மேலும் மெட்ரோ பாலிட்டன் நகரங்களில் மெட்ரோ ரெயில் பணிகளில் ஜப்பான் நிறுவனங்கள் பங்கு பெற முன் வர வேண்டும். ஆசியாவின் நாடுகளில் தாய்லாந்து இந்தியாவுடன் சிறந்த நட்பு நாடாக திகழ்கிறது. பிரதமர் யின்லக் ஷினாவத்ராவுடன் நடத்தும் பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை மேம்படுத்தும். இவ்வாறு அதில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியச் செய்திகள்



தமிழகம் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் வெயில் கொளுத்தி வரும் நிலையில், ஜம்மு-காஷ்மீரில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தால் ஏரியில், வாடிக்கையாளர்கள் வருகைக்காக காத்திருக்கும் படகுகள்.

## பயங்கரவாதத்தை அனுமதிக்கக் கூடாது




பயங்கரவாதத்தை ஒரு போதும் அனுமதிக்க கூடாது என குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மோடி டுவிட்டரில் கூறியதாவது, சத்தீஸ்கரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் ஜனநாயகத்துக்கு எதிரான தாக்குதல். இது கடும் கண்டனத்துக்குரியது. இத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்சி பேதமின்றி நாம் அனைவரும் ஒரு அணியில் நின்று மாவோயிஸத்துக்கு எதிராக போராட வேண்டும் என்று மோடி தெரிவித்துள்ளார். ராஜ்நாத்சிங் கண்டனம் சத்தீஸ்கரில் நடந்த நக்சல் தாக்குதலுக்கு பா.ஜ. தலைவர் ராஜ்நாத்சிங் கண்டனம் தெரிவித்ததோடு நக்சல் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# ஜெகன்மோகன் ரெட்டியின் சிறைவாசம்; ஆதரவாளர்கள் இன்று உண்ணாவிரதம்



ஜெகன்மோகன் ரெட்டியின் சிறைவாசத்தில் ஓராண்டு நிறைவை முன்னிட்டு ஆதரவாளர்கள் நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆந்திராவில் வை. எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி சொத்து குவிப்பு வழக்கில் சி.பி.ஐ. பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தன்னை பிணையில் விடுவிக்க கோரி சி.பி.ஐ.நீதிமன்றில் ஜெகன் மோகன் ரெட்டி தாக்கல் செய்த மனு பல முறை நிராகரிக்கப்பட்டது. இதனால் அவர் தொடர்ந்து ஐதராபாத் சஞ்சல குடா சிறையில் உள்ளார்.

ஜெகன்மோகன் ரெட்டி கடந்த 2012ஆம் ஆண்டு மே 28ஆம் திகதி சி.பி.ஐ. பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரது சிறைவாசம் ஓராண்டு நிறைவு பெறுகிறது. ஜெகன்மோகன் மீது சி.பி.ஐ. 5 குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து உள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என வை. எஸ்.ஆர். காங்கிரசார் குற்றம் சாட்டியுள்ளனர்.

சி.பி.ஐ.செயலை கண்டித்து வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் இன்று ஆந்திரா மாநிலம் முழுவதும் உண்ணாவிரதம் - ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள். ஜெகன்மோகன் ரெட்டியின் தாயாரும், வை.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சியின் தலைவருமான விஜயலெட்சுமி ஐதரபாத் சித்திரா பார்க் அருகே உண்ணாவிரதத்தில் ஈடுபட் டனர். இதில் செகந்திராபாத் தொண்டர்களும் பங்கேற்கிறார்கள். நடைபயணம் மேற்கொண்டு வரும் ஜெகன் மோகன் தங்கை சர்மிளா மேற்கு கோதாணி மாவட்டம் பாலகொள்ளு என்ற இடத்தில் இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்.

# சீன இராணுவ ஊடுருவலில்லை; இந்திய இராணுவம் மறுப்பு

இந்தியாவுக்குள் 5 கி.மீ தூரத்துக்கு சீனா மீண்டும் ஊடுருவவில்லை. இந்திய இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலம் லடாக் செக்டாரில் உள்ள தபுலத் பெக் ஓல்டி பகுதியில் சீன இராணுவம் கடந்த மாதம் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்தது. 5 இடங்களில் சீன இராணுவம் கூடாரமும் அமைத்தது. சீன இராணுவ அதிகாரிகளுடன் 3 தடவை பேச்சு நடத்தியும் அவர்கள் பின்வாங்கிச் செல்ல மறுத்தனர். லடாக் செக்டார் தங்களுக்கு சொந்தமானது என்று உரிமை கொண்டாடினார்கள்.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி சீனப்பிரதமர் இந்தியா வருவதற்கு 2 நாட்களுக்கு முன்பு லடாக் செக்டரில் இருந்து சீன இராணுவம் பின்வாங்கிச் சென்றது. இதனால் எல்லையில்



ஏற்பட்ட பிரச்சினை சுமூகமாக தீர்ந்து விட்டதாகக் கருதப்பட்டது.

இந்நிலையில் சீன இராணுவ வீரர்கள் காஷ்மீர் மாநிலம் லடாக் செக்டாரில் முன்பு எந்தப் பகுதியில் ஊடுருவினார்களோ, அதே பகுதியில் மீண்டும் ஊடுருவி இருக்கிறார்கள். முன்பு போலவே சீன வீரர்கள் அதிநவீன ஆயுதங்களுடன் வந்துள்ளனர். ஏராளமான மோப்ப நாய்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

சீன வீரர்களின் இந்தச் செயலால் இந்திய இராணுவ மூத்த அதிகாரிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். சீன இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்கள் பேசத் தொடங்கியுள்ளனர். இதற்கிடையே காஷ்மீர் மாநிலத்துக்குள் ஊடுருவி இருக்கும் சீன இராணுவ வீரர்கள், அந்தப் பகுதியை சீனாவுடன் இணைக்க வீதி போடும் பணியைத் தொடங்கியுள்ளனர். நேற்று முன்தினம் வரை சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவுக்கு வீதி போடும் பணி முடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வீதி போடும் வேலை நடந்து வருகிறது. இதனால் ஊடுருவிய பகுதியில் நிரந்தரமாக தங்கும் முடிவில் சீன இராணுவம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்நிலையில், இந்தியாவுக்குள் சீன இராணுவம் மீண்டும் ஊடுருவியதாக வெளியாகியுள்ள தகவலை இந்திய இராணுவ வட்டாரங்கள் மறுத்துள்ளன.







## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................................

முகவரி : ..............................................

பிறந்த ஆண்டு : ..............................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பிரான்ஸ் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்தை போதிக்க எதிர்ப்பு



பிரான்ஸ் நாட்டின் பல கலைக்கழகங்களில் ஆங்கிலத்தில் பாடங்களை போதிக்க அந்நாட்டு அரசியல் பிரமுகர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பிரெஞ்ச் மொழி 1635ஆம் ஆண்டிலிருந்து வழக்கத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த மொழியிலிருந்து தான் ஆங்கிலத்தில் பல மொழி சேர்க்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், ஆங்கிலம் அளவுக்கு பிரெஞ்ச் மொழி சர்வதேச அளவில் வளரவில்லை. கடந்த மார்ச் மாதம் பிரான்ஸ் உயர் கல்வி அமைச்சர் ஜெனிவிவி பியாரசோ கூறுகையில், நம் நாட்டில், 3,000 இந்திய மாணவர்கள் மட்டுமே படிக்கின்றனர். லண்டனுடன் ஒப்பிடுகையில், இது மிகவும் குறைவு.

எனவே, நம்முடைய பல் கலைக்கழகங்களில் ஆங்கிலத்தில் பாடங்களைப் போதித்தால் வெளிநாட்டு மாணவர்களை அதிகம் கவர முடியும். எனவே, பல்கலைகளில் ஆங்கிலத்தில் கல்வி போதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பெண் அமைச்சரின் இந்தக் கருத்துக்கு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசின் இந்த அறிவிப்பு பிரான்ஸ் மொழி அழிவதற்கு வழி வகுக்கும். அதுமட்டுமல்லாது, ஆங்கிலம் வளருவதற்கு தான் இந்த நடவடிக்கை உதவும் என்றனர்.

பிரான்ஸ் நாட்டின், 800 கல்வி நிலையங்களில் ஏற்கனவே, ஆங்கிலத்தில் போதிக்கப்படுவதாக பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் கடும் மழை வெள்ளத்தில் மூழ்கி இருவர் பலி



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் கனமழை பெய்ததில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 2 பெண்கள் உயிரிழந்தனர். அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தின் சான் அன்டோனியா பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக, அங்குள்ள ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பல வாகனங்கள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன.

காணாமல் போனவர்களை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.வெள்ளத்தில் சிக்கி வீட்டின் கூரை, மரங்களின் மீது தவித்துக்கொண்டிருந்தவர்கள் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர்.சான் அன்டோனியா நகரில் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

அங்கு தொடர்ந்து மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்தோடுவதால் வாகனங்களில் செல்வதை தவிர்க்குமாறு சான் அன்டோனியா நகர மேயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நிலவின் தாதுப்பொருட்கள் விண்வெளி இரகசியங்களை அறிய உதவும்



துணைக்கோள் நிலவின் மேற்பரப்பில் கிடைக்கும் தாதுப் பொருட்கள் விண்வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் விண் பாறைகள், விண்கற்கள் நிலவில் மோதியதால் கிடைத்தவையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதனால் நிலவு எதனால் உருவாகியுள்ளது என்று நம்புவதிலும் சில சந்தேகங்கள் எழுந்துள்ளன. பொதுவாக நிலவுகளின் மேற்பரப்பில் ஸ்பைனல் மற்றும் ஆலிவைன் தாதுப் பொருட்கள் காணப்படுகின்றன.

விண்ணில் சுற்றிக்கொண்டிருக்கும் விண்பாறைகள் மற்றும் விண்கற்களின் பொதுவான கூறுகளாக இந்த ஸ்பைனல் மற்றும் ஆலிவைன் தாதுப் பொருட்கள் இருக்கின்றன. மேலும் நிலவின் கடினமான மேற்பரப்புகளை ஆராய்வது இந்த சூரிய மண்டலத்தின், பூமியின் உருவாக்கத்தை தெரிந்து கொள்ள உதவும் என்று கூறப்படுகிறது.

# வயிற்றில் குழந்தையுடன் இறந்தவர், உயிர் பிழைத்த அதிசயம்




வயிற்றில் குழந்தையுடன் இறந்தவர் குழந்தை பிறந்த பின்னர் உயிர் பிழைத்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. அமெரிக்காவின் மிசவுரி நகரில் வசிக்கும் எரிக்கா நிக்ரெல்லி(32) என்பவர் அங்குள்ள பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றி வந்தார்.இவரது கணவர் நாத்தனும் அதே பள்ளியில் ஆசிரியராக உள்ளார். 9 மாத கர்ப்பிணியாக இருந்த எரிக்கா கடந்த பெப்ரவரி மாதம் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த பொழுது தன்னிலை இழந்து மயங்கி விழுந்தார். கண்கள் இரண்டும் மேல் நோக்கி நிலைகுத்தியபடி, வாயில் இருந்து நுரை தள்ளிய நிலையில் இருந்த எரிக்காவை அவரது கணவரும் சக ஆசிரியைகளும் மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர்.

மருத்துவமனையை சென்றடைவதற்குள் எரிக்காவின் நாடித்துடிப்பும், இதயத்துடிப்பும் முற்றிலுமாக அடங்கிப்போய்விட்டது. அவர் இறந்துவிட்டதாக அறிவித்த டொக்டர்கள் வயிற்றில் இருந்த குழந்தையை மட்டும் அவசர அவசரமாக அறுவைச் சிகிச்சை மூலம் வெளியே எடுத்தனர்.

இது, ஏறக்குறைய பிணத்துக்கு பிரசவம் பார்த்த கதை போன்றது தான் என்றாலும், அதிஷ்டவசமாக குழந்தையின் நாடி மற்றும் இதயத் துடிப்பு நன்றாகவே இருந்தது.

குழந்தையை வெளியே எடுத்த பின்னர் எரிக்காவின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்த டாக்டர்கள், அவரது இதயம் துடிப்பதை அறிந்து திகைத்துப் போனார்கள். இதனையடுத்து அவருக்கு ஒட்சிசன் செலுத்தி இயல்பு நிலைக்கு வரவழைத்தனர்.இந்த அரிய சம்பவம் தொடர்பாக கருத்துக் கூறிய டாக்டர்கள் பத்தில் ஒன்பது பேர், முதல் கட்ட மாரடைப்பில் உயிரிழந்து விடுவார்கள். அபூர்வமாக எரிக்கா போல் சிலர் உயிர் பிழைக்கவும் வாய்ப்புள்ளது என்றனர்.

# சிரியாவில் கலவரம் 11 பேர் உயிர்ப்பலி



கினியா நாட்டில் ஏற்பட்ட கலவரத்திலும் துப்பாக்கிச் சூட்டிலும் 11 பேர் பலியாகியுள்ளனர். ஆபிரிக்க நாடான கினியாவில் நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடத்தும்படி எதிர்க்கட்சி வலியுறுத்தி வருகிறது. ஆனால், ஆளும் கட்சி காலம் கடத்தி வருகிறது. இது எதிர்க்கட்சியினரை ஆத்திரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நிலையில் கடந்த வாரம் எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். அப்போது, அவர்கள் துப்பாக்கி மற்றும் கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களை கைகளில் ஏந்திச்சென்றனர். அதை தடுத்த பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு பொலிஸாரும் தாக்கினர். இதனால் கலவரம் மூண்டது. இதை தொடர்ந்து இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர் அதில், 11 பேர் உயிரிழந்தனர். மேலும் ஏராளமானவர்கள் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதற்கிடையே, கலவரத்தில் பலியானவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.



மியான்மர் சென்றுள்ள ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே, யாங்கூன் நகரில் எதிர்க்கட்சி தலைவர் ஆங் சாங் சூயியை சந்தித்துப் பேசினார்.

# டுபாய்க்கு கொக்கைன் கடத்திய தாய்லாந்துப் பெண்ணுக்கு 15 ஆண்டு சிறை



கொக்கைன் போதைப் பொருளைக் கடத்திவந்த தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணுக்கு டுபாய் நீதிமன்றம் 15 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

டுபாயில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் சில மாதங்களுக்கு முன்னர் வந்திறங்கிய ஒரு பெண் பயணியின் நடவடிக்கைகளில் சுங்க இலாகா அதிகாரிகளுக்கு சந்தேகம் தோன்றியது. இதனையடுத்து, தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த அவரை பெண் காவலர்கள் சோதனையிட்ட போது, அவரது உடலில் பிளாஸ்டிக் கவரில் மடித்து வைக்கப்பட்டிருந்த 1 1.2 கிலோ "கொக்கைன்" போதைப் பொருளைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து அவரை கைது செய்த பொலிஸார், டுபாய் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி போதைப்பொருள் கடத்திய குற்றத்துக்காக அந்தப் பெண்ணுக்கு 15 ஆண்டு சிறை தண்டனையும், 2 இலட்சம் திர்ஹம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். 10 நாட்களுக்கு முன்னரும் போதைப்பொருள் கடத்திவந்த குற்றத்திற்காக தென் ஆபிரிக்காவை சேர்ந்த வேறொரு பெண்ணுக்கு இதேபோல் 15 ஆண்டு சிறை தண்டனையும் 2 இலட்சம் திர்ஹம் அபராதமும் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நயினை உற்சவகாலத்தில் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க முன்னேற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தின் போது அடியார்களின் நன்மை கருதி கொடியேற்றம், சப்பரம், தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக் காலங்களில் காலை 6.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை இலங்கை போக்குவரத்து சபையின் விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

நயினாதீவு ஆலய உற்சவ ஒழுங்கு தொடர்பான விசேட மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

அடியார்களுக்கான போக்குவரத்து தொடர்பாக அங்கு கருத்துத் தெரிவித்த இலங்கை போக்குவரத்து சபை யாழ். சாலை அதிகாரி, முக்கிய திருவிழாக் காலங்களில் 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை சேவைகள் இடம்பெறும் என்றும், இதற்கென குறிகாட்டுவானில் 15 பஸ்கள் சேவையில் ஈடுபடுமெனவும் தெரிவித்தார்.

மேலும் விசேட திருவிழாக் காலங்களில் காலை 6.30 மணி முதல் தனியார் பஸ்சேவைகளும் அரை மணி நேரத்திற்கு ஒரு தடவை சேவையில் ஈடுபடுமென தனியார் பஸ்சேவை சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

குறிகாட்டுவான் - நயினாதீவு படகுச் சேவை காலை 7.00 மணி முதல் ஆரம்பிக்குமெனவும் இதற்கான துறைமுக ஒழுங்குகளை கடற்படையினர் மேற்கொள்வர் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் முக்கிய திருவிழாக் காலங்களில் பொசன் பௌர்ணமி தினம் வருவதால் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஸ்ரீநாக விகாரைக்கான இறங்குதுறையையும் அக்காலங்களில் பயனபடுத்துவதற்கு இணக்கம் காணபபட்டுள்ளது.

இதேவேளை திருவிழாக் காலங்களில் ஏற்படும் எரிபொருள் தேவையை ஈடுசெய்வதற்காக இன்றிலிருந்து எரிபொருள் சேமிப்பினையும் விநியோகத்தினையும் நயினாதீவு ப.நோ.கூ. சங்கம் வழங்கவுள்ளது.

மேலும் ஆலய சூழலில் கட்டாக்காலிகளாக திரியும் நாய்களையும் ஆலயச் சூழலில் இருந்து பிரதேச சபையினரால் அகற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் மேலதிக அரச அதிபர், வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர்கள், படகு உரிமையாளர்கள், கோவில் அறங்காவல் சபையினர், வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், ஊர்காவற்றுறை பொலிஸ் அத்தியட்சகர், கடற்படை அதிகாரிகள், தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர் (26)

## முல்லையிலும் வெசாக் பந்தல்

முல்லை நகரத்தில் வெசாக் கூடுகள் மக்களை கவரும் விதத்தில் அமைக்கப்பட்டு காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதில் பாரம்பரிய வரலாறுகளை சித்தரிக்கும் காட்சிகள் அமைக்கப்பட்டதால் இதனை பொதுமக்கள் திரண்டு சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (40)

# உவர்நீர் தடுப்பணை பூர்த்தியாகும் நிலையில் பணிகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மேற்கு மற்றும் அல்லைப்பிட்டி வடக்குப் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டு வந்த உவர்நீர் தடுப்பணை வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பகுதிகளில் மழை நீரைத் தேக்கி வைக்கவும், கடல் நீர் உட்புகுந்து விளை நிலங்கள் உவர்த்தன்மையாவதைத் தடுக்கவும், அந்தப் பகுதிகளின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கவுமென யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 2 கிலோமீற்றர் நீளமான இந்த உவர்நீர் தடுப்பணைகள் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

மண்டைதீவுக்கு சுமார் 4 மில்லியன் ரூபாவும், அல்லைப்பிட்டிக்கு 4 மில்லியன் ரூபாவும், இந்தப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த ஆண்டு மண்டைதீவுப் பகுதியின் வடக்குப் பக்கமாகவுள்ள இரண்டு கிலோமீற்றர் நீளமான மற்றுமொரு உவர்நீர் தடுப்பணை புனரமைக்கப்பட்டிருந்தமை தெரிநததே. (பா)

# குடும்பத் தகராறு இரு பிள்ளைகளை பலியெடுத்தது

குடும்பத் தகராறு காரணமாக தனது இரு பிள்ளைகளுடன் ஆற்றில் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்த தாய் காப்பாற்றப்பட்டு, இரு பிள்ளைகள் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று மீராவோடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை சுங்காங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய சின்னத்தம்பி வாணிஸ்ரீ என்பவரே குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக தான் தற்கொலை செய்வதுடன், தனது இரு குழந்தைகளையும் சேர்த்து கொலை செய்வதற்கு திட்டமிட்டு நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் மீராவோடை முருகன் ஆலயத்திற்கு பின்னால் உள்ள ஆற்றில் குதித்துள்ளார்.

இச்சம்பவத்தை அவதானித்த அயலவர்கள் இவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் 7 வயதான தவசீலன் டிலக்சினி மற்றும் 4 வயதான தவசீலன் மீனுஜா ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

தாய் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மீராவோடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மரணமடைந்த இரு குழந்தைகளினதும் சடலங்கள் மீராவோடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனா - இலங்கை...

இலங்கை நன்மையடையும். சீனா அதிகாரம் பெற்று வருவது இந்தியப் பெருங்கடல் நாடான இலங்கைக்கு நன்மைகளைத் தரக்கூடும்.

சீனாவின் 70 வீதமான சக்தி வளங்கள் இந்தியப் பெருங்கடல் வழியாகவே இறக்குமதி செய்யப்படுகிறது.

சீனாவின் எழுச்சியால் இலங்கை அச்சம் கொள்ளவில்லை. மாறாக, சீனா உலகின் பலமான சக்தியாகும் போது, அதன் மூலம் இலங்கைக்கு நன்மை கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன்.

ஏனென்றால், எமது உறவுகள் இயல்பானது, தரமானது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகள் குறித்து இந்தியா போன்ற ஏனைய சக்திகள் தமக்கு எதிராக பயன்படுத்தப்படுமோ என்று சந்தேகம் கொள்கின்றன.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவு தனிப்பட்ட ரீதியான ஒன்று அல்ல. அது குறித்து அச்சப்படத் தேவையில்லை.

ஏனைய நாடுகளுடனும் கூட இலங்கை நட்புறவு கொண்டுள்ளது. அதனால் சீனாவுடனான உறவுகளில் முரண்பாடுகள் ஏதும் இல்லை.

ஏனென்றால், ஏனைய நாடுகளின் நலன்களைப் பாதிக்கக் கூடிய விடயங்களுக்கு இலங்கையுடன் கொண்டுள்ள உறவுகளைப் பயன்படுத்திக் கொள்ள சீனா முனைவதில்லை.

சீனாவுடன் அரசியல் உறவுகள் நன்றாகவே உள்ளன. சீனாவுடனான வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை எதிர்பார்க்கிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன ஐக்கியத்திற்கான...

தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகளும் அவர்களின் பரம்பரையினரும் இன்று போல் அன்றும் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கைக்கு எதிர்ப்பை வெளியிட்ட பாவ கர்மத்தின் பிரதி பலனே நாடு தொடர்ந்தும் ஒன்றுபடமுடியாத அனர்த்தத்தில் சிக்கி உள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார கவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் போரில் மாத்திரமே நாட்டை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாது. அனைத்து மக்களையும் ஒரு நாட்டின் மக்களாக மாற்ற வேண்டும். அனைத்து இனங்களையும் ஏற்றுக்கொண்ட இனங்களாக அவர்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும். இதற்காக செல்லும் பயணத்தில் முதல் கட்டப் பயணம் வடக்கு மாகாண சபைத் தேர்தலாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் தாம் கருத்துக்களை வெளியிடுவதில்லை எனவும் ஏகாதிபத்தியவாதிகளே தென் பகுதியில் பௌத்த சக்திகளை தூண்டி வருகின்றனர் எனவும் கூறியுள்ளார்.

மறுபுறம் ஈழ சக்திகளை புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து தூண்டி வருகின்றனர். அவர்களே தமிழகத்தை இந்திய மத்திய அரசாங்கத்திற்கு எதிராக தூண்டி வருகின்றனர். இவர்களே இந்திய - சீன எதிர்ப்புகளையும் தூண்டி வருகின்றனர். ஆசிய பிராந்தியத்தை சுற்றிவளைத்து, அவர்களின் பலத்தை இந்தப் பிராந்தியத்தில் செயற்படுத்தவே முயற்சித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஆதரவு வழங்கி வருபவர்கள் எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

நிறுத்தப்பட்டது. ஆயினும் கூட இந்தியாவின் ஏனைய பகுதிகளில் இன்னமும் அவ்வப்போது பயிற்சி அளிக்கப்பட்டே வருகிறது.

செய்தியாளர்களிடம் பேசிய அந்தோணி, இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தமிழ் மண்ணில் பயிற்சி அளிக்கப்படக் கூடாது என்று மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாகத்தான் தெரிவித்துள்ளார். எனவே ஏனைய மாநிலங்களில் இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சிகள் வழங்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

## வருகிறார்...

பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளையின் விஜயம், இலங்கையின் நல்லிணக்கத்துக்கு உந்துதலை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நவநீதம்பிள்ளையின் விஜயம் மூலம் இலங்கைக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கும் இடையில் நட்புறவு ஏற்படும் என்றும் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

குறித்த குண்டைப் போடுவார். அத்துடன் வடக்கு மாகாண சபைத் தேர்தல் திட்டமிட்டபடி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறமாட்டாதென எதிர்க்கட்சிகள் தெரிவித்துவரும் கருத்துக்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் கட்சியும் 13 இற்கு எதிராக செயற்படப்போவதாக அறிவித்துள்ளது. முன்னரும் நாம் 13 இற்கு எதிர், தற்போதும் எதிர். எப்பொழுதும் அதற்கு எதிரென அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## வடக்கில்...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறும் என அறிவித்துள்ளது. இந்நிலையில் அரசாங்கத்தில் உள்ள சிலர் அதனைத் தடுத்து நிறுத்த பல்வேறு காரணங்களைக் கூறி சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் வடக்கில் உள்ள மக்கள் சுதந்திரமான தேர்தல் இடம்பெற்று தமக்கு ஜனநாயக உரிமை கிடைக்காதா என ஆவலாய் உள்ளனர்.

பிள்ளையான் மற்றும் கருணா ஆகியோர் நாட்டில் சுதந்திரமாக உரிமைகளை அனுபவித்து வாழ முடியும் என்றால் ஏன் வடக்கில் வாழும் சாதாரண பொதுமக்கள் சுதந்திரமாக வாழக்கூடாது.

வடக்கில் வாழ்கின்றவர்களும் இலங்கையர்களே. ஏனைய மாகாண மக்கள் அனுபவிக்கும் சுதந்திரமும் உரிமைகளும் வடக்கில் வாழும் மக்களுக்கும் கிடைக்க வேண்டும். எனவே, அரசாங்கம் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒருநாள்...

மாற்றுக் காணி வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று தாம் கேள்விப்பட்டதாக அவர்கள் கூறினர்.

மாற்றுக் காணியோ நஷ்டஈடோ வழங்கப்படும் என உத்தரவாதம் அளிக்கும் ஆவணங்களைக் காட்டியபோதும், உத்தரவாதம் கொடுத்தவர்களிடம் போய் வாங்கிக்கொள்ளுங்கள் என அதிகாரிகள் கூறிவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

பல காலமாக தாங்கள் இப்பகுதியிலேயே வாழ்ந்துவருவதாகக் கூறும் இவர்கள், ஏற்கனவே நடந்த் உடன்பாட்டின்கீழ் தமக்கு மாற்றுக் காணியோ நஷ்டஈடோ கிடைக்குமானால் இப்பகுதியிலிருந்து வெளியேறுவதற்கு தாம் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

## சீனா சென்ற...

வெளிவிவகார அமைச்சர் லியூ சென்மின் மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் ரஞ்சித் உயங்கொட உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

ஜனாதிபதியுடன் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், வெளிவிவகார ஆலோசகர் சஜின் வாஸ் குணவர்த்தன, அமைச்சர்கள் விமல் வீரவன்ச, டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏ.எச்.எம்.அஸ்வர், நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும் சீனா சென்றுள்ளனர்.

நான்கு நாள் விஜயமாக சீனா சென்றுள்ள ஜனாதிபதி, அந்நாட்டு ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள பீக்கிங் பூகோள சேவ்வ மாநாட்டிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை சட்ட மா அதிபர் ஓரவஞ்சகம்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் விடயத்தில் சட்டமா அதிபர் பக்கச்சார்புடன் நடந்துகொள்வதாக அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நண்பர் என்று கூறப்படும் குணசுந்தரம் ஜெயசுந்தரம் என்ற சந்தேகநபரை ஒரு மாதகால சிறைத்தண்டனையின் பின்னர் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் இணங்கியதாக அந்த அமைப்பு தெரிவிக்கின்றது.

இந்த சந்தேகநபர் ஒரு கோடீஸ்வர வர்த்தகர் என்றபடியாலேயே அரசாங்கம் அவருக்குச் சார்பாக நடந்துகொண்டுள்ளதாக அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பின் தலைவர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பணபலமும் அரசியல் செல்வாக்கும் கொண்ட சந்தேகநபர்களுக்கு அரசாங்கம் சிறப்பு சலுகைகளை வழங்குவதையே இது காட்டுவதாகவும் அவர் கூறினார்.

அவ்வாறே, அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதாகவும், ஆனால் சாதாரண கைதிகளுக்கு இவ்வாறான சலுகைகள் கிடைப்பதில்லை என்றும் சடடத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை எதிர்க்கின்ற, தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொள்ளும் சந்தேகநபர்களுக்கு குறைந்த தண்டனைகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிப்பதாக சட்டமா அதிபர் அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஏராளமான தமிழ்க் கைதிகள் குற்றங்களை ஒப்புக்கொண்டு புனர்வாழ்வு பெறுவதற்கு தயாராக இருக்கின்ற போதிலும் அவர்கள் இன்னும் சிறைகளில் வாடுவதாகவும் அவர்களின் தண்டனைகளை குறைப்பது பற்றி சட்டமா அதிபர் கரிசனை காட்டவில்லை என்றும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். வருகிறார் அமைச்சர் ஹக்கீம்



நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட அமைப்பாளர் றொசான் தமீம் நேற்று தெரிவித்தார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், முஸ்லிம் சமூகத்தினரின் பிரச்சினைகள் தொடர்பில் முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, வடமாகாண முஸ்லிம்களின் நலன் கருதி இந்திய வீட்டுத்திட்டம் மற்றும் காணி தொடர்பான நடமாடும் சேவையை நடத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த நிலையில், இவர்களுக்கான காணி மற்றும் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பான புள்ளிவிபரங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த புள்ளிவிபரங்கள் திரட்டும் நடவடிக்கை பூர்த்தியடைந்தவுடன் கொழும்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி அமைச்சருடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலின் போதே அமைச்சரின் யாழ். விஜயத்திற்கான திகதி தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.(25)

# தீக்குளித்ததேரரின் கோரிக்கை நிறைவேற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பௌத்த தர்மத்திற்காகவும், நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தீக்குளித்து உயிர்துறந்த போவத்தகே இந்திர ரத்ன தேரரின் கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி பௌத்த அமைப்புகள் சில கண்டியில் நேற்று மாலை ஆர்ப்பாட்டம் நடத்தின.

கண்டிநகர மத்தியிலுள்ள ஜோர்ஜ் ஈ.டி.சில்வா கூரைப் பூங்காவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கண்டி பௌத்த ஒன்றிய அமைப்பு, பொது பலசேனா உட்பட பல்வேறு பௌத்த அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டில் பௌத்த தர்மத்திற்கு ஏற்றவாறு பௌத்த அரசியல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்,

பலவந்தமாக மதமாற்றம் செய்கின்றவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்,

சர்வமத, சர்வஜன அமைப்புகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும்,

மாடுகள் கொல்லப்படுவதற்கு முற்றாகத் தடை விதித்தல் போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.

நாட்டிற்காகவும், பௌத்த மக்களுக்காகவும் உயிர் தியாகம் புரிந்த போவத்தகே இந்திர ரத்ன தேரரை நினைவுகூருவதுடன், அவரின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அதன் பின்னர், கண்டி நகரின் வீதிகள் ஊடாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் மற்றும் வீடுகளில் இன்று மஞ்சள்நிற கொடியைப் பறக்கவிடுமாறும் மக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

# சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் பாதுகாப்பு பிரிவினர் மீது தாக்குதல்

(வவுனியா)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரின் பாதுகாப்பு அதிகாரிகள் மூவர் நேற்றிரவு வவுனியாவில் அடையாளம் தெரியாத குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் உணவகம் ஒன்றில் இரவு உணவு அருந்திக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற அடையாளம் தெரியாத குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த 32 வயதான பாதுகாப்பு அதிகாரி ஒருவர், வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன் வவுனியாபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# முதலாம் தரத்திற்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் 2014 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கல்வியமைச்சினால் நேற்று முதல் கோரப்பட்டுள்ளது.

தங்களுடைய பிள்ளைகளை அரசாங்கப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கு விரும்புகின்ற பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாவலர்கள் மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தமக்குப் பொருத்தமான பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்குமாறும் கல்வியமைச்சு கோரியுள்ளது.

விண்ணப்பங்களை 2013 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டுமாறும் கல்வியமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.


வற்றாப்பளை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்



இப் பொங்கல் உற்சவமானது எதிர்வரும் 31.05.2013 அன்று சிறப்பு காலை அபிஷேக பூசையும் சாமபூசையாக வழர்ந்து கட்டும் பூசையும் இடம்பெறும். இதில் அனைத்து பக்த அடியார்களையும் கலந்துகொண்டு காளி அம்மனின் ஸ்ற்ர சக்திகளையும் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

ஆலய பரிபாலன சபையினர்


# பால்மா விற்பனை வீழ்ச்சி; வர்த்தகர்கள் கவலை

(கொழும்பு)

நியூசிலாந்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் இரசாயனப் பதார்த்தம் கலந்துள்ளதாக வெளியான செய்தியை அடுத்து பால்மா விற்பனையில் வீழ்ச்சியேற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்களில் அதிகமானவர்கள் பால்மா பாவனையை கைவிட்டுள்ளதாகவும் இதனால் பால் மா விற்பனை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நியூசிலாந்தில் கறவைப் பசுக்கள் மேயும் புல் தரைக்கு டி.சி.டி. என்னும் இரசாயனம் தெளிக்கப்படுவதைத் தொடர்ந்து அப்புல்லினை உட்கொண்ட பசுக்களில் இருந்து பெறப்பட்ட பாலில் இருந்து தயாரிக்கப்படும் பால்மா இரசாயனப் பதார்த்தங்களின் தாக்கத்தினைக் கொண்டிருப்பதாக சில நாடுகள் ஆய்வுகளின் மூலம் கண்டறிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இவ்விடயம் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுக் குழு என்பன உடனடி நடவடிக்கை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிப்படுத்திய போதிலும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளாது பால்மா பாவனையை கைவிட்டுள்ளனர்.

நியூசிலாந்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் எவ்வித கதிரியக்கத் தாக்கமும் இல்லை என இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரஞ்சித் லக்ஷ்மன் விஜேவர்தன தெரிவித்தார்.

இவற்றை ஏற்றுக்கொள்ளாத மக்கள் பால்மா பாவனையை விடுத்து பால்மா பக்கட் கொள்வனவை தவிர்த்துள்ளனர். இதனால் பால்மா விற்பனை வீழ்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புகையிலை, மதுபான கட்டுப்பாடு; விரைவில் சட்டதிருத்தங்கள்

புகையிலை மற்றும் மதுபான கட்டுப்பாட்டுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. புகையிலை மற்றும் மதுபான பாவனை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்த சாதகத் தன்மைகளைக் கொண்டு இத்திருத்தங்கள் அமையப்பெறவுள்ளதாக அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொது மக்கள் நடமாடும் அனைத்து பொது இடங்களிலும் புகைப்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. எனினும் இதில் வீதியோரங்கள் உள்ளடக்கப்படவில்லை என அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வீதிகளில் புகைப் பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் புகையிலை மற்றும் மதுபான கட்டுப்பாட்டுச் சட்டத்தில் கடுமையான திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.